[illegible] 1924-35

[illegible] 15 [illegible] 6

JC

R65ന2, MMVD

N25·15·6.

156749

Regd: No. M. 916.

THE VEDANTA DIPIKA

வேதாந்த தீபிகை.

ரக்தாக்ஷி௵,
1924—1925.
ஸம்புடம் 15.

பங்குனி௴.
MARCH
ஸஞ்சிகை 6.

பத்ராதிபர். }
கார்யதர்சி. }
ர. ஸ்ரீநிவாஸராகவ
அய்யங்கார், எம்.ஏ.

OFFICE OF THE REG... OF ...
7- APR 1925
MADRAS

விஷய ஸூசி

1. நமது ஸம்ப்ரதாயத்தின் ஸ்திதி:—கார்யத... 129
2. தூக்கம்:—பத்ராதிபர். 134
3. வனபோஜன மஹோத்ஸவம்:—ஸ்ரீ தேசிக... 138
4. அருளிச்செயல்களும் இசையும்:—
ஆரியூர் ஆ. வ. பத்மநாப ராமாநுஜதாஸன். 149
5. புஸ்தக விமர்சம்:—பத்ராதிபர். 152
6. ஸ்ரீபரமபத ஸோபாநம், (வ்யாக்யானத்துடன்):—
ஸ்ரீ. உ.ப. வே. பண்டிதபூஷணம் சே. காஸிம்மாசார்யர். ௬
7. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை (தமிழ்மொழி பெயர்ப்புடன்):—
ஸ்ரீ. உ.ப. வே. பண்டிதபூஷணம் சே. காஸிம்மாசார்யர். 113

Office:—2/11, Adiappa Mudaly Street, Purasawalkam.
K. R. Press, Madras.
வர்ஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4

உலக ப்ரசித்தி பெற்றது.

"டிக் - டாக்" | கடியாரம் விலெ, | ரூ. 3.



ஜெர்மனி தேசத்தில் செய்யப்பட்டது. மிக்க அழகாயுள்ளது. சுவற்றில் மாட்டக்கூடியது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. விலெ குறைவு. பலமதிகம். இன்றைக்கே எழுதுங்கள்.

"டிக் - டாக்"

கடியாரம் 1 - க்கு விலை ரூ. 3.

(ரிஜிஸ்டர்ட்)

விலாசம்:— பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 27.

மதராஸ்.

ச்ருதப்ரகாசிகா ஸஹிதம், ஸ்ரீபாஷ்யம் தமிழ்மொழி பெயர்ப்பு.

முதல் ஸஞ்சிகை (லகுஸித்தாந்தம் முடிய)	ரூ.	...	1	4	0
2-வது மஹா பூர்வபக்ஷம் முடிய		...	0	10	0
3-வது ஜிஜ்ஞாஸாதிகரணம்		...	0	12	0
ஸ்ரீ வசநபூஷண ப்ரமாணத்திரட்டு அரும்பத விளக்கம்		...	1	4	0
திருவாய்மொழி ஈட்டின் ப்ரமாணத்திரட்டு முதல் 3-பத்து		...	0	12	0

திருப்புறம்பியம் போஸ்டு, கும்பகோணம். } T. D. ராமஸ்வாமி நாயுடு.

BRAHMINS!!

Do you know that you have a journal to speak for you?

It is

THE "BRAHMAN"

Published *twice* a month in *English* at Triplicane, Madras

WITH

An Annual Subscription of only Rs. 2-8-0. Sample copy as. 2.

N. B. The profit of this journal goes to *Brahmana Gurukulas* to be established by the Editor.

Will you Kindly support it?

Manager.

OFFICE OF ... OF BOOKS
7 APR 1925
MADRAS

ஶ்ரீ:

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஶ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
கார்யதர்சி }

ஸம்புடம் 15.] ரக்தாக்ஷி ௵, பங்குனி௴. [ஸஞ்சிகை 6.

[illegible]

[illegible]

[ஶ்ரீபாகவதம். 1-9-28.]

ஶ்ரீ:

நமது ஸமூஹத்தின் துஸ்திதி.

நமது ஸபை சென்ற பதினான்கு வருஷகாலமாக ஒவ்வொரு வருஷத்தின் முடிவில் பரிகணிதர்களாயுள்ள வித்வான்களைக்கொண்டு மஹாஸங்கம் ஒன்றை நடத்திக்கொண்டும், நம்முடைய ஸமூஹத்தின் முன்னேற்றத்துக்கும் ஸித்தாந்தம் பரவி வ்ருத்தி அடைவதற்கும் வேதாந்ததீபிகை என்னும் பத்ரிகையை ப்ரதிமாதம் ப்ரசுரித்துக்கொண்டும், இன்னும் பலவித ஸத்க்ருத்யங்களால் நம்முடைய ஸமூஹத்துக்குச் செய்துவரும் உபகாரம் இவ்வளவு என்று சொல்லி முடியாது. இதற்கு வேண்டிய மூலதனமில்லாமல் அஹன்யஹநி காலக்ஷேபம் செய்பவர்களைப்போல் சந்தாவையே நம்பி உஜ்ஜீவித்து மஹா தாரித்ர்ய தசையிலிருந்து சென்ற இரண்டு வருஷத்தில் உபவாஸ ப்ராயமாக இருந்துகொண்டு ரூ. 500 மூலதனமாகச் சேர்த்துக்கொண்டது நமது தீபிகாபிமானிகளுக்கு தெரிந்தவிஷயம். வேதமார்க்கத்தை நிந்தித்தும் அலக்ஷ்யம் செய்தும் அதர்மத்திலும் நாஸ்திகத்திலும் தீவ்ரமான ஊக்கங்கொண்டிருக்கும் ஜனங்களால் நிறைந்திருக்கும் இக்கக் காலத்தில் இம்மாதிரியான ப்ரவ்ருத்தியானது வ்ருத்தி அடைவது ஸாத்யமில்லாததே. ஆனாலும் நமது ஸபாப்ரவர்த்தகர்கள் நமது பூர்வாசார்யர்கள் சென்றிருக்கும் மார்க்கத்தைக் கைப்பற்றி ஸநாதன தர்ம பீஜத்தை ரக்ஷிக்க வேண்டியது அவச்யமாகையால் நம்மவர்கள் எவ்வளவு அநாதரித்தாலும் அதை கவனியாமல் தங்களால் இயன்றமட்டும்

18649

ச்ரமப்பட்டு ப்ரவ்ருத்தி செய்து வருகிறார்கள். இந்த தாரித்ர்ய தசையைப் பரிஹரித்து, ஸபையை முன்னுக்குக் கொண்டுவந்து அநேக ஸத்கார்யங்களைச் செய்யும்படி ஒவ்வொரு வார்ஷிக ஸங்கத்திலும் பலமுறை முறையிட்டுக்கொண்டும் ஸ்வாமிகளின் திருவுள்ளத்தில் கொஞ்சமேனும் விச்வாஸம் உண்டாகவில்லை. சென்ற பதினான்காவது வார்ஷிக மஹாஸங்கத்தில் அக்ராஸனாதிபதி தம்முடைய உபந்யாஸத்தில் ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரும் ஒவ்வொரு வருஷமும் ஒரு ரூபாய் கொடுப்பார்களேயானால் ஸபையின் மூலதனமானது நம்மால் கணக்கிடமுடியாத அளவை உடையதாக ஆகும் என்று சொன்னதை சிரத்கம்பத்துடன் ஸபைக்கு எழுந்தருளின ஸ்வாமிகள் அனைவரும் கேட்டும், பிறகு தீபிகையில் நான்காவது ஸஞ்சிகையில் அந்த உபந்யாஸத்தை ஸபைக்கு விஜயம் செய்யாத மெம்பர்களனைவரும் படிக்கவேண்டுமென்று பிரசுரம்செய்தும், திருச்சினாப்பள்ளி ஜில்லா வயலூர் என்னும் க்ராமத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ. உ.வ. ராமாநுஜாசார்யர் என்னும் ஸ்வாமி ஒருவர் அக்ராஸனாதிபதி ஸாதித்தது மிகவும் அழகாயிருக்கிறது என்று அப்யுபகமம் பண்ணி மூலதனத்துக்கு தான் ஒரு ரூபாய் அனுப்புவதாக எழுதினாரே தவிர வேறு எவரிடமிருந்தாவது இதுவரை ஒருகடிதத்தைக்கூடக் காணோம். இந்த அநாதரவு நம் ஸ்ரீவைஷ்ணவர்களிடமிருக்கிறதே தவிர வேறு எவர்களிடமுமில்லை. ஸ்மார்த்தர்கள் மாத்வர்கள், இன்னும் மற்ற ஜாதியாரிடம் ஜாஸ்தியான ஐகமத்யமிருக்கிறது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். ப்ரதி வருஷம் திருச்சானூரில் மத்வஸபை எவ்வளவு விமர்சையாக நடக்கிறது? அந்த ஸபைக்கு எவ்வளவு மூலதனமிருக்கிறது பாருங்கள்? வடதேசத்தில் ஆர்ய ஸமாஜத்தார்கள் அபரிமிதமான மூலதனத்தைச் சேர்த்து காங்கிரி என்னும் ஊரில் குருகுலம் ஒன்றை ஏற்படுத்தி இருப்பதையும், அவர்கள் ஒருகார்யம் செய்யவேண்டும், அதற்கு த்ரவ்யம் இவ்வளவு வேண்டும் என்று சொல்லி வாய்மூடுவதற்குள் பணம் சேர்ந்து விடுவதை பேபர்மூலமாக பார்க்கிறோமல்லவா. இந்த தக்ஷிணதேசத்தில் படிப்பு, பணம், வைஷ்ணவஸமூகம், இவைகளுக்குக் குறைவா? இவ்விதம் இருந்தும் ஸபை தாரித்ர்யத்தை அனுபவிப்பது ஸ்ரீவைஷ்ணவர்களுடைய அநாதரவினாலேயே தவிர மற்றக் காரணம் எது என்று சொல்லமுடியும்.

சென்ற வருஷத்தில் ஸ்ரீரங்கத்திற்குப் போய் ஸ்வாமிகளை ஸபையை ஆதரிக்க வேணுமென்று நேரில்ப்ரார்த்தித்ததில் 62 ஸ்வாமிகள் மெம்பரானார்கள். அதில் சிலர் அந்த வருஷத்திய ஆறுமாஸ ஸஞ்சிகைகளை வாங்கிக்கொண்டு ஏழாவது வி. பி. யில் அனுப்பப்பட்ட பொழுது திருப்பிவிட்டார்கள். அந்த ஸ்வாமிகளை பலமுறை மெம்பராக இருந்துவரும்படி ப்ரார்த்தித்தும், இஷ்டமில்லாவிடில் பெற்றுக்கொண்ட 6-ஸஞ்சிகைகளின் க்ரயத்தை அனுப்பும்ப

7- APR 1925 MADRAS

டிக்கும், அப்படிக்கு அனுப்ப அஸௌகர்ய முள்ளவர்களை ஸஞ்சிகைகளையாவது திருப்பி அனுப்பும்படிக்கும் பலதரம் ப்ரார்த்தித்தும் தபால் செலவும் தேஹச்ரமும் மிஞ்சினதே தவிர கார்யகரமாகவில்லை. பிறகு அவர்களிடமிருந்து பதில் கிடைப்பது அஸாத்யம் என்று நினைத்து அவர்களை மெம்பர் ஜாப்தாவிலிருந்து விலக்கிவிடும்படி நேர்ந்தது. மிகுதியான ஸ்வாமிகளிலும் அநேகர் இந்த வருஷத்திய நான்காவது ஸஞ்சிகை வி. பி. யில் அனுப்பப்பட்டபோது அதை திருப்பிவிட்டு விட்டு ஸுகமாய் எழுந்தருளியிருக்கிறார்கள். ஆஸ்திக்யம் உள்ளவர்களும் உபபத்தி உள்ளவர்களும் இவ்விதம்செய்திருக்கிறார்கள். இந்தஅல்பமான ரூபாய் மூன்றோ, ஐந்தோ வருஷாவருஷம் கொடுப்பது அவர்களுக்கு அஸாத்யமா?

ஐரோபா தேசத்திலிருந்து தங்கள் ஊர்பணத்தைக்கொண்டு ஒருநாளைக்கு ஒரு மணிநேரம் பைபிளை பாடம் சொல்லி வைக்க கிறிஸ்துவ பாதிரிமார்கள் எவ்வளவு பாடுபட்டுவருகிறார்கள். எங்கே பார்த்தாலும் ஆகாசத்தை அளாவின கோபுரங்களை உடைய கட்டடங்களைக் கட்டி அதிலிருந்து எல்லாருடைய காதிலும் விழும்படி இருவேளைகளிலும் 'ஆயுக்ஷீணம் ந ஜாநாஸி த்வம் ஜாக்ரத ஜாக்ரத' (ஆயுஸ் ஒவ்வொரு நாளும் குறைந்து வருவதை நீ அறியவில்லையே, ஆகையால் ஜாக்ரதை, விழித்துக்கொள்) என்று சொல்லுமாப்போல் பெரிய மணிகளை அடித்துக்கொண்டு ஜயகோஷத்துடன் தங்கள் மதத்தைப் பரவச்செய்யப் பாடுபட்டுவரும் பாதிரிமார்களையும் அவர்களுடைய கட்டடங்களையும் இந்த ஸ்வாமிகள் தங்களுடைய உத்யோக சாலைகளுக்குச் செல்லும்போது ப்ரதிதினம் பார்த்துக்கொண்டேபோய்க் கொண்டிருந்தும், நாம் நம்முடைய ஸபையை அநாதரவு செய்கிறோமே என்கிற எண்ணம் அவர்களுக்கு உண்டாக வில்லையே!

இவர்களுக்கு இவ்வளவு அநாதரவு பிறந்ததற்குக் காரணம் என்ன என்று சொல்லுவது. ராவணன் அதிகபுத்திமானாகவும் படித்தவனாகவும் இருந்தபோதிலும் கெட்டகார்யத்தில் ப்ரவர்த்தித்ததற்குக் காரணம் 'ஊஹ ஸஹெ நவாஸஷி ஸஹெ வா தா ந வதநெ' என்று சொன்னாள் பிராட்டி. இவர்கள் வஸிக்குமிடமோ பூலோக வைகுண்டமென்று சொல்லப்பட்டதாய் பகவான் பரமபத க்ஷீராப்திகளையும் விட்டு, பரமபோக்யமாய் உகந்து லோகோஜ்ஜீவனார்த்தமாக நித்யவாஸம் பண்ணும் ஸ்ரீரங்கம் என்னும் க்ஷேத்ரம். தர்சனமாத்ரத்தால் ஸகல பாபங்களையும் போக்கடிக்கக்கூடிய மஹான்கள் அநேகர் காலக்ஷேபங்களை ஸாதித்துக்கொண்டு அங்கங்கே எழுந்தருளி இருக்கிறார்கள். இப்படி இருக்கச் செய்தேயும் இந்த ஸ்தலத்தார்கள் இவ்வளவு அநாதரவு

செய்வது கலியின் கோலாஹல மென்பதைத் தவிர வேறு என்ன என்று சொல்லமுடியும்.

வெகுதூரமாக வட இந்தியாவில் ஆச்ரம விபாகங்கள் அழிந்துகொண்டே வருகின்றன. இந்தத் தென் இந்தியாவிலோ பகவான் நம்முடைய க்ஷேமத்துக்காக ஆழ்வார்கள் ஆசார்யர்கள் என்ற ரூபத்தால் அவதரித்து க்ரந்தங்களைச்செய்து கொடுத்து தர்மத்தை நிலைநிறுத்தினதினாலன்றோ சத்ருக்களுடைய உபரோதம் எவ்வளவுவந்தும் அத்தால் நம்முடைய ஜாத்யாதி தர்மங்கள் குலையாமல் அத்யாபி காப்பாற்றி வரப்பட்டு வந்திருக்கிறது. இவ்வளவு உபகாரத்தை அடைந்தும், அசல் தேசத்திலிருந்து பணத்தை யதேஷ்டமாகக்கொண்டுவந்து ஆஸேது ஹிமாசலம் சர்ச்சுகளை கட்டி, தங்களுடைய மதத்தைப் பரவச்செய்யும் பாதிரிமார்களையும், வட இந்தியாவில் ஸநாதன தர்மத்தை குலைத்து மதத்தை சீர்படுத்துவதாக தான்தோன்றியாக நினைத்து நமது பூர்வீக நிலைமையை அழிக்கப் பாடுபட்டுவரும் அநேக ஸமாஜங்களையும் பார்த்தும், நம்முடைய வைதிக மதத்தையும் ஆசாரத்தையும் காப்பாற்றி ரக்ஷிக்கப்பாடுபடும் இந்த ஸபையை நம்மவர்கள் முன்வந்து அபிமானித்து ஆதரிக்காதது எவ்வளவு துக்ககரமான கார்யம்.

ஒவ்வொருவரும் பொதுநன்மைக்கு கொஞ்சமாவது பாடுபட வேண்டியது ஜன்மஸித்தமான கடமை. தாம் கெட்டுப்போவதனால் தமக்கு பாதகமில்லை என்று தோன்றினாலும் ஜாதிக் கட்டுப்பாட்டுக்கு தம்மால் குலைபாமை இல்லாமலிருக்கும் பொருட்டு, அதை ஒத்து நடப்பது தர்மம் என்றும், மீறிநடந்தால் பாபம் என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஸ்ரீக்ருஷ்ணன் அவாப்த ஸமஸ்தகாமனாக இருந்தும் ஸாந்தீபினி இடம் காலக்ஷேபம் பண்ணி குருதக்ஷிணைகொடுக்க எவ்வளவு ப்ரயாஸப்பட்டதை நாம் புராணத்திலிருந்து கேழ்க்க வில்லையா. இவ்வளவும் லோக ஸங்க்ரஹத்துக்காகத்தானே அவர் நடத்திக்காண்பித்தார். லோகஸங்க்ரஹம் என்பது ஜாத்யபிமானத்துக்காகவே தான் ஏற்பட்டது. ஜாத்யபிமான மில்லாமல்போனால் அந்த ஜாதி எப்படி முன்னுக்குவரும். தீபிகையை வாசிக்க ஸாவகாசமில்லை என்று நினைத்துக்கொண்டாலும்ஸரி, அது உபயோகமற்ற ஜர்னல் என்று எண்ணம் கொண்டாலும் ஸரி, அது நம்முடைய ஜாதியாரின் முன்னேற்றத்திற்காகவே நடத்தப்படுவதாலும், சிலருக்கு உபயோகமாக இருப்பதாலும நாமும் அதை ஆதரிப்பது தர்மம் என்று எண்ணம் கொண்டாலல்லவோ ஸபைக்கு நல்லகாலமாகச் சொல்லலாம். தனிகர்கள் வைத்யர்களுக்கு த்ரவ்ய ஸஹாயம் செய்து ஔஷதங்கள் செய்ய ஏற்பாடு பண்ணினால் அல்லவோ ஏழைகளுக்கு அவர்கள் தர்மத்துக்கு வைத்யம் செய்வார்கள். தனிகர்கள் ஸபையை அநாதரவு செய்தால் எவ்விதமாய் நல்லகார்யம் செய்யமுடியும்?

ஸ்ரீ. உப. வே. புத்தங்கோட்டகம் ஸ்வாமி கரூர் ப்ராந்தம் உபந்யாஸம்செய்த காலத்தில் ஏராளமாய் சேர்ந்த மெம்பர்கள் வரவர ஸபையை அநாதரித்து வருகிறார்கள். ஸ்ரீ. ஆராவமுதன் நித்யவாஸம் பண்ணும் திவ்யக்ஷேத்ரத்தில் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ ஸம்ருத்தியாக இருந்தும் ஸபைக்கு மெம்பரானவர்கள் ஐந்தாறுபேர்களே. பெருமாள் கோவிலில் (காஞ்சிபுரத்தில்) மெம்பரா யிருக்கிறவர்கள் மூன்றுபேர்களே. பெரிய திவ்யதேசங்களில் இவ்விதம் ஆஸ்திக்யமிருந்தால் ஸாமான்ய தேசங்களைப்பற்றிக் கேழ்க்கவும் வேணுமா?

ஸபைக்கு சந்தா முன்பணமாக கட்டவேண்டுமென்று நியமமிருந்தும் தீபிகையை பன்னிரண்டு மாஸங்களும் பெற்றுக்கொண்டும் பணம் கட்டாமலும், பணத்தைப்பற்றிக் கேழ்க்கும் காலத்தில் பத்ரிகையை வேண்டாம் என்று சொல்லுகிறவர்களும் சிலர் உளர். சந்தா நிலுவையிலிருக்கிறவர்களுக்கு அதை அனுப்பும்படி எவ்வளவு கடிதம் எழுதினாலும் மௌனமாக இருப்பவர் சிலர். ப்ரதிவருஷமும் ப்ரயாஸப்பட்டு புதுமெம்பர்களைச் சேர்த்துக்கொண்டு வரும்போது ‘சாண் ஏறினால் முழம் சருக்குவதுபோல்’ பழய மெம்பர்கள் விலகிக்கொண்டுவந்தால் ஸபை எப்படி வ்ருத்தி அடையும்?

இப்படி நமது ஸமூஹத்துக்கு வந்திருக்கும் துஸ்திதியை கவனித்து இனிமேலாவது ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவர்களும் தாம் ஸபையின் மெம்பராக இல்லாமலிருப்பது அதர்மம் என்றும், "குரங்குகள் மலையை நூக்க குளித்துத் தாம் புரண்டிட்டோடி தரங்கநீர் அடைக்கலுற்ற சலமிலா அணிலும் போல" என்ற கணக்கிலே தன்னுடைய ஸபை என்று விச்வாஸத்துடனும் அபிமானத்துடனும் ஸபையை ஆதரிப்பார்களே யானால் நமது ஸமூஹத்துக்கு வந்துகொண்டிருக்கும் தாழ்வு நிவ்ருத்தி ஆகிவிடும். ஸபைக்கு முதல் வகுப்பினருக்குச் சந்தா ரூபாய் ஐந்தென்றும், இரண்டாவது வகுப்பினருக்கு ரூபாய் மூன்று என்றும் வைத்திருப்பது ஸபையின் மெம்பராக இருப்பதற்காகவே. மெம்பராக இருப்பவர்களுக்கு தீபிகை இனாமாக அனுப்பப்படுவது ஸபையின் நியமம். ஒவ்வொருவருக்கும் இந்த துஸ்திதியைத் தெரிவிக்க வேண்டியது தர்மம் என்று எண்ணியும், தெரிவித்தால் ஒருஸமயம் நிவர்த்திக்க யத்தனிப்பார்கள் என்று நம்பியும் இதை விஜ்ஞாபனம் செய்துகொண்டோம்.

நம்முடைய ஸ்ரீவைஷ்ணவர்கள் அநேகம் இடங்களிலும்பரவி இருப்பதால் விசாலமான தேசத்தில் ஒருவன்போய் ஸஞ்சாரம் செய்துகொண்டு ஸ்வாமிகளை நேரில் ப்ரார்த்திப்பது ஸாத்யமில்லாத கார்யமானதால் எக்ஸிக்யூடிவ் கமிட்டி மெம்பராக அங்கங்கே இருப்பவர்களும் இன்னும் ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரும் ஸபையில் ச்ரத்தை எடுத்துக்கொண்டு தங்கள் ஊரிலுள்ள ஸ்வாமிகளுக்கு விஜ்ஞாபனம் செய்து மெம்பர்களாக சேர்த்தும் பணத்தை அனுப்பும்படி செய்தும் ஒத்தாசை செய்தார்களே யானால் ஸபை முன்னுக்கு வரும்.

இவ்விதம் தத்காலம் சேலத்தில் ஸ்ரீ. உப. வி. என். செல்லமய்யங்கார் ச்ரமம் எடுத்துக்கொண்டு; புதுமெம்பர்கள் சேர்த்தும், மெம்பர்களைச்ஸௌகர்யம் பார்த்து சந்தாவை வஸூலித்து அனுப்பியும் செய்துவரும் உபகாரத்தை எவ்வளவு என்று சொல்லிமுடியாது. இவ்விதம் ஒவ்வொரு ஊரிலிருக்கும் கமிட்டி மெம்பர்களும் இன்னும் மற்ற ஸ்ரீவைஷ்ணவர்களும் தாங்களும் செய்யவேணும் என்று எண்ணங்கொண்டால் ஸபை நிரம்பவும் வ்ருத்தி அடைந்துவிடும்.

இந்த விஜ்ஞாபனத்தை எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் கவனிக்கும்படி செய்ய பகவானை ப்ரார்த்திக்கிறோம்.

ர. ஸ்ரீநிவாஸராகவன்,
கார்யதர்சி.

தூக்கம்.

சென்ற பிப்ரவரிமீ'த்திய ஆரோக்யதீபிகையில் நாம் 'தூங்கவேண்டியதேன்' என்கிற தலைப்பின்கீழ் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது. "நாம் பகற்காலத்தில் வேலைசெய்யும்போது நமது சரீரத்திலுள்ள ச்வாஸப்பைகளும் மாம்ஸ நாடாக்களும் சோர்வை அடைகின்றன. நாம் எவ்விஷயத்தைப்பற்றி சிந்தை செய்தாலும் இந்தச் சோர்வு ஏற்படுகிறது. நரம்புக்கோமூளைக்கோ அதிகவேலை கொடுக்கக் கொடுக்க அதிக சோர்வு ஏற்படுகிறது. நாம் விழித்துக்கொண்டிருக்கும் காலத்தில் இவ்விதம் சரீரத்திற்கு கஷ்டம் ஏற்படுகிறது.

"நாம் தூங்கும் காலத்தில் தான் மாம்ஸநாடாக்கள் இழந்த சக்தியை திரும்பி அடைகின்றன. நாம் உண்ணும் ஆஹாரமும், குடிக்கும் ஜலமும் சுவாஸிக்கும் காற்றும் சோர்ந்துபோன கருவிகளுக்கு பலத்தைக் கொடுக்கின்றவாயினும், நாம் தூங்கும் காலத்தில் தான் அவைகள் புனருத்தாரணமடைகின்றன. இந்தக் காலத்தில் தான் மாம்ஸநாடாக்களின் சோர்வினால் உத்பத்தியாகும் விஷப்தார்த்தங்கள் சரீரத்தின் பல பாகங்களிலிருந்தும் வெளிப்படும் இடத்திற்கு வந்து சேருகின்றன. ஆகையால் நாம் சக்தியுள்ளவர்களாகயிருப்பதும், வியாதிகளை எதிர்த்து நிற்கும் சக்தியைப்பெறுவதும் நன்றாகத் தூங்குவதைப் பொருத்திருக்கிறதென்பது நிச்சயம். நாம் போதுமான அளவு தூங்காவிடில் இந்த புனருத்தாரணவேலை பூர்த்தி அடைவதில்லை. சோர்வினால் உண்டான விஷபதார்த்தங்கள் சரீரத்திலேயே தங்கிவிடுவதால் நாம் எப்பொழுதும் களைத்தே இருப்போம். வியாதிகள் வராமல் தடுத்துக்கொள்ளக்கூடிய சக்தி இல்லாமலிருப்பதுடன் பலவித நோய்களுக்கும் ஆளாகிறோம். ஆகவே தூங்குவது அவச்யம். அதை வேறு எதுவும் பூர்த்திசெய்யமுடியாது. அவரவர்களுடைய தேஹஸ்திதியை உத்தேசித்து தூங்கவேண்டிய காலத்தை நிர்ணயிக்க வேண்டுமாயினும் நமது தேஹத்தை புனருத்தாரணம் செய்துகொள்ள தினம் எட்டுமணி நேரமாவது தூங்கவேண்டியது அவச்யம். க்ரமமான அளவுக்கு அதிகமாக எவ்வளவுகாலம் நாம் வேலைசெய்கிறோமோ அதற்குத் தகுந்தபடி நமது சரீர சக்தியும் குறைகின்றது. இதனால் புதிதான வியாதிகள் உண்டாகின்றன. அதிகநேரம் விழித்திருப்பதால் வேறு துறைகளில் இன்பமுண்டானபோதிலும் அதற்குத் தகுந்தபடி சரீரத்தின் சக்தி குறைந்துவிடும்"—என்று.

வைத்யசாஸ்த்ரத்தில் ஆராய்ச்சிச்செய்யும் வித்வான்கள் தங்களுடைய அனுபவத்தால் தூங்குவது அவச்யம் என்றும் தூங்குவதால் சோர்வை அடைந்த அங்கங்கள் மறுபடி சக்தியுள்ளவைகளாக ஆகின்றனவென்றும் சொல்லுகிறார்களே தவிர தூங்குவதால் ஏன் அப்படி வருகிறது என்பது இதுவரை அவர்கள் ஆராய்ச்சி செய்யவில்லை. ஒருவன் ஆரோக்யமாக இருக்க வேண்டுமானால் எட்டுமணிநேரம் தூங்கவேண்டும் என்று கூறுகிறார்கள். தூக்கத்தில் இவர்கள் நினைப்பதைப்போல் எல்லா வ்யாபாரங்களிலிருந்து ஆத்மாவுக்கு ஓய்வு ஏற்படுவதில்லை. தூக்கத்தில் ஸ்வப்நம் ஸுஷுப்தி என்னும் இரண்டு தசைகளிருக்கின்றன. ஸ்வப்நத்தில் நம்முடைய மனதைத் தவிர மற்ற இந்திரியங்களுக்கு ஓய்வு உண்டாகிறதே தவிர நாம் விழித்துக்கொண்டிருக்கும்போது எவ்வளவு வேலையும் அனுபவமும் உண்டாகிறதோ அதுபோலவே மானஸிகமான வேலையும் அனுபவமும் உண்டாகிறது. ஆகையால் நாம் திருடர்களால் துரத்தப்படுவதாயோ, பிறரால் அடிக்கப்படுவதாயோ, கஷ்டங்களை அனுபவிப்பதாயோ ஸ்வப்நம் கண்டால் அப்போது துக்கத்தை அனுபவித்து மனதுக்குக் கஷ்டம் ஏற்படுவதுடன் விழித்துக்கொண்டபிறகும் கூட அந்தக் கஷ்டங்களால் உண்டான பலங்களை அனுபவிக்கிறோம். இப்படி ஸ்வப்நம் காணும் தசையில் விழித்துக்கொண்டிருக்கும் தசையைப்போல் ஸுகதுக்கானுபவங்கள் ஏற்படுவதால் அதுவும் விழித்துக்கொண்டிருப்பதற்கு ஸமமேதவிர அந்த ஸ்வப்நமும் ஓய்வு அடைந்த அவயவங்களுக்கு இழந்துபோன பலத்தைக் கொடுக்காது. ஒருவன் ராத்ரி முழுவதும் தூங்கும்பொழுது ஸ்வப்நமேகண்டு கொண்டிருந்து எழுந்தால் அவன் படுக்கப்போகு முன் இருந்த ச்ரமத்தைக்காட்டிலும் ஜாஸ்தி ச்ரமத்துடன் எழுந்திருப்பானேதவிர தூக்கத்தால் அவனுக்கு ஸுகம் உண்டாயிருக்காது. இந்த ஸ்வப்நத்தைப்பற்றி விஸ்தாரமாய் தனித்தொரு வ்யாஸம் எழுதவேண்டிய அவச்யமானதால் இவ்விடம் விஸ்தரிக்கவில்லை.

ஸுஷுப்தியோ ஸ்வப்நத்தைப்போல் அல்ல. இந்த அவஸ்தையில் நம்முடைய ஜீவாத்மா பரமாத்மாவிடம் சேர்ந்து பரமாத்மாவால் ஆலிங்கனம் பண்ணப்பட்டு உள் வெளி என்ற ஸகல விஷயங்களிலும் உபரதியடைந்து பரமாத்மாவின் ஆலிங்கனத்தால் பரமஸுகத்தை அடைகிறது. இந்த ஸுகம் அனுபவிக்கும் தசையை நாம் அறிகிறதில்லை. ஸுஷுப்தி தசை ஆகி விழித்துக்கொண்டபொழுது 'நான் ஸுகமாய்த் தூங்கினேன்' என்கிற எண்ணம் உண்டாகிறது. அப்பொழுதுதான் தூங்கும்போது தான் அனுபவித்த ஸுகத்தைத் தெரிந்துகொள்ளுகிறான். கீழ்க்கூறியபடி சரீரங்களின் உருப்புகள் புஷ்டியை அடைவது மாத்ரம் ப்ரயோஜனமாகில் அப்போது ஸுகத்தை அனுபவிப்பதற்கு ந்யாயமில்லை. விழித்துக்கொண்டபிறகு ஸுகமாய் தூங்கினேன் என்கிற எண்ணமும் உண்டாகக்கூடாது. இந்த விஷயம் ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் நாலாவது அத்யாயம் மூன்றாவது ப்ராஹ்மணம் இருபத்தோராவது ப்ரச்னத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமாத்மா தன்னுடைய பிள்ளைகளாகிய நாம் சரீரங்களைச் சுமந்து இந்திரியங்களை ப்ரேரணம் செய்து ச்ரமம் அடைந்து களைத்துப்போகிறோமே என்று கருணைகொண்டு நம்முடைய களைப்பைத் தீர்த்துவிடுவதற்காக நம்மிடம் அநுக்ரஹத்தால் நம்முடைய ஜீவாத்மாவை ஆலிங்கனம் பண்ணிக்கொள்ளுகிறார். பரமாத்மாவின் ஸம்யோகம் ஏற்படுவதால் ஜீவாத்மாவுக்கு இவ்வளவு நன்மை உண்டாகிறது. சாந்தோக்ய உபநிஷத்தில் ஆறாவது ப்ரபாடகம், எட்டாவது கண்டத்தில் முதல் ப்ரச்னத்தில் உத்தாலக ஆருணி என்னும் ருஷிச்ரேஷ்டர் தன் புத்ரன் ச்வேதகேதுவுக்கு 'தூக்கத்தைப்பற்றி என்னிடமிருந்து அறிந்துகொள், ஒருவன் தூங்கும்போது அதாவது ஸுஷுப்தி தசையில் அவன் பரமாத்மாவுடன் சேருகிறான்; ஆகையால் அவன் ஸ்வபிதி (தூங்குகிறான்) என்கிறார்கள், (ஸ்வம் ஹி அபீதோ பவதி) ஸ்வம் - தனக்கு அந்தர்யாமியான பரமாத்மாவை, அபீத: - அடைந்தவனாக, பவதி - ஆகிறான்' என்று உபதேசித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவனுக்கு பரமாத்மாவின் ஸம்ச்லேஷத்தால் ஸுகம் உண்டாகிறது. இல்லாவிட்டால் ஸுகம் உண்டாகாது என்பதை ஒரு லௌகிக த்ருஷ்டாந்தத்தால் காட்டுகிறார். ஒரு நீள நூலால் ஒரு இடத்தில் கட்டப்பட்ட ஒருபக்ஷி நாலா பக்கத்திலும் பரந்து பரந்து பார்த்து தேஹத்துக்கு ச்ரமம் தட்டினவுடன் வேறு எந்த விதத்திலும் ஸுகம் உண்டாகாமல் கட்டப்பட்ட இடத்தில் வந்து உட்கார்ந்து ச்ரமபரிஹாரம் செய்துகொள்ளுகிறதோ அதுபோலவே நம்முடைய ஹ்ருதயத்திலிருக்கும் பரமாத்மாவை அடைந்து சோர்வை

அடைந்த நாம் களைப்பைத் தீர்த்துக்கொள்ளுகிறோம். கௌஷீதகி உபநிஷத்திலும் நாலாவது அத்யாயம் 19, 20 - ப்ரச்னங்களில் பலாகி என்னும் ப்ராஹ்மணனுக்கும் அஜாதசத்ரு என்னும் ராஜாவுக்கும் நடக்கும் ஸம்வாதத்தில், பலாகி என்பவருக்கு பரப்ருஹ்மத்தின் ஸ்வரூபத்தை உபதேசிக்கவேண்டுமென்று ஒரு தூங்கிக்கொண்டிருந்தவனிடம் போய் முதலில் கூப்பிட்டு எழுந்திருக்காமையால் பிறகு அஜாதசத்ரு ஒரு தடியால் தூங்குகிறவனைத் தட்டினவுடன் அவன் விழித்துக்கொண்டான். அப்போது பலாகியைப்பார்த்து இவன் எவ்விடம் தூங்குகிறான், எவ்விடத்திலிருந்தான், எப்படி மறுபடி விழித்துக்கொண்டான் என்று கேள்விகளைக் கேட்டுக்கொண்டு, பலாகிக்குப் பதில் சொல்லமுடியாமையால் தானே இவன் ஸ்வப்ந தசையில்லாமல் ஸுஷுப்தியில் தூங்கும்போது ப்ராணனுடன் (பரமாத்மாவுடன்) சேர்ந்துவிட்டான். அப்போது அவன் ஒரு விதமான உள் வெளி இந்திரியங்களுடைய ப்ரவ்ருத்தி இல்லாமல் கேவலம் பரமாத்மாவை அனுபவித்துக்கொண்டிருந்தான், தடியால் தட்டினதும் அந்த அனுபவத்திலிருந்து திரும்பிவிட்டான், என்று அநேக காரணங்களை நிரூபித்து பரமாத்மாவின் ஸ்வரூபத்தை உபதேசித்தார்.

ஆகையால் நம்முடைய ஜீவாத்மாவிற்கு பரமாத்மாவின் ஸம்ச்சேலஷம் அடைவதால் ஸகல கஷ்டங்களும் நிவ்ருத்தியாகி சோர்ந்துபோன கரண களேபரங்களுக்கு நஷ்டமான சக்தி உண்டாகிறது. அந்தக் கரணகளேபரங்களை நம் ஜீவாத்மாமறுபடி வேலையில் தூண்டுகிறது. இப்படி வேதங்கள் நமக்கு உபதேசித்தும் இதை தெரிந்துகொள்ளாமல் எல்லாம் ஸ்வபாவத்தால் உண்டாகிறது என்று ஜனங்கள் சொல்லுவது நமக்கு பரமஹிதத்தின்பேரில் கொடுக்கப்பட்ட வேதங்களை அறியாமையாலே தான். இந்த ஸுஷுப்திகாலம் மிகவும் ஸ்வல்பமானகாலம். இந்த அல்பகாலத்தில் இவ்வளவு ஆனந்தமும் ஸுகமுமிருந்தால் சாச்வதமான ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய பரமபதத்தின் ஆனந்தத்தைப்பற்றி கேட்கவும் வேணுமா. ஸூக்ஷ்மமாய் பராமர்சித்துப் பார்த்தால் நமக்கு லோகத்தில் ஸுகம் என்று தோன்றுகிறதெல்லாம் துக்கத்தை முடிவாக உடையதாயிருக்கிறதென்று நம்முடைய அனுபவத்தில் கண்டிருக்கிறோம். இந்தக் கஷ்டங்கள் கூட ஸுஷுப்தி தசையில் பரமாத்மாவின் ஸம்பந்தத்தால் நிவ்ருத்தி அடைந்து விடுவதைப் பார்த்துவிட்டு சாச்வதமான பேரானந்தத்தில் ஆஸக்தி இல்லாமலிருக்கிறோமே என்று அனுசயம் நமக்கு உண்டானால் நம்முடைய ஜன்மம் ஸபலமாகும்.

ஸ்ரீ:

மைலாப்பூர் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன்

வனபோஜன மஹோத்ஸவம்.

இது சென்ற தையீ 25உ (8—2—25) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அன்று மாலை 5-மணிக்கு கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீ. உப. வ. வே. ஸ்ரீநிவாஸய்யங்காரின் அக்ராஸனத்தின் கீழ் ஓர் ஸபை நடந்தது. அப்பொழுது திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் பண்டிதபூஷணம் ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமி 'விஷ்ணுகண்டாவதார ரஹஸ்யம்' என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்தருளினர். சென்னை ஹைகோர்ட்டு வக்கீல்கள் ஸ்ரீ. உப. எஸ். வரதாசார்யர், என். ராஜகோபாலாசார்யர், கே. எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், டி. ராமஸ்வாமி அய்யங்கார், என் ஸ்ரீநிவாஸாசார்யர், வி. தேசிகாசார்யர், வி. பாஷ்யம் அய்யங்கார் முதலியவர்களும் இன்னும் அநேகம் லௌகிக ப்ரமுகர்களும் ஸேவை ஸாதித்தார்கள். அந்த உபந்யாஸத்தின் சுருக்கம் கீழ் குறிப்பிடப்படுகிறது.

விஷ்ணு கண்டாவதார ரஹஸ்யம்.

இப்பொழுது அடியேன் விஜ்ஞாபனம் செய்யும் விஷயம் மேலெழுந்தவாரியாய்ப் பார்க்கும் சிலருக்கு அத்ருப்திகரமாயிருக்கலாம். ஏனெனில் பகவானை விட்டுவிட்டு ஆசார்யனை ஸேவிக்கப்போகவேண்டும் என்று சொல்லப்போகிறேன். ஸ்ரீகீதாசார்யன் 'இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே' (அஸூயை இல்லாத உனக்குச் சொல்லுகிறேன்) என்று அர்ஜுனனுக்குக் கீதையை உபதேசம் செய்தான். அதைப்போல நீங்களும் ஆசார்யனுக்கு இவ்வளவு பெருமையா என்று அஸூயைப்படாமல் கேட்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

பகவானுடைய அவதார ரஹஸ்யத்தின் பெருமையை 'எதிர்சூழல் புக்கு நிற்கிற சரண்யனுடைய தாய் முலைப்பால்போல பத்யதமமுமாய் ப்ரியதமமுமான உபதேசத்தாலே தெளிந்த அவதார ரஹஸ்யாதிகளாகிற தீர்த்தங்களை அவகாஹித்துத்தேறி' என்றும், 'இவ்வவதாரங்களெல்லாம் ஸத்யமென்றும், இவற்றில் ஈச்வரனுக்கு ஜ்ஞானாதிஸங்கோசமில்லை யென்றும், இவ்விக்ரஹங்கள் சுத்தஸத்வமயங்கள் என்றும், இவற்றிற்கு ஈச்வரேச்சாமாத்திரமே காரணமென்றும், தர்ம ரக்ஷணம் பண்ணவேண்டும் காலமே காலமென்றும், ஸாது பரித்ராணாதிகளே ப்ரயோஜனங்கள் என்றும்,] இவ்வர்த்தம் தெளிந்து அநுஸந்திப்பார்க்கு ஏகஜந்மத்திலே ஸ்வாதிகாராநுகுண ஸமீஹிதோபாயபூர்த்தியாலே ஜந்மாந்தரம் அநுபவியாதே முக்தராகலாம் என்றும், 'ஜந்ம கர்ம ச மே திவ்யம்' என்று துடங்கி ஐந்து ச்லோகத்தாலே கீதாசார்யன் அருளிச்செய்தான். இது ஸ்வதந்திர ப்ரபத்தி நிஷ்டனுக்கு சரண்யகுணவிசேஷ ஜ்ஞானமுகத்தாலே உபயாநுஷ்டான க்ஷணத்திலே மஹாவிச்வாஸாதிகளை ஸ்திரீகரித்து உபகாரகமாம்' என்றும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் க்ருதக்ருத்யாதிகாரத்திலும் தத்வத்ரய சிந்தனாதிகாரத்திலும் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. பலம் கொடுக்க ஆரம்பித்திருக்கும் கர்மங்களை அநுபவித்த பிறகே மோக்ஷம் பெறக்கூடிய பக்தியோக நிஷ்டனுக்கும் இந்த அவதாரரஹஸ்ய சிந்தனம் அந்த ப்ராரப்த கர்மத்தை நசிப்பித்து ஒரே ஜன்மத்திலேயே மோக்ஷம் அடையும்படி செய்கிறது. ஸ்வதந்திர ப்ரபத்தி நிஷ்டனுக்கு மஹாவிச்வாஸத்தில் தார்ட்யத்தை உண்டாக்கி அதுவழியாக உபகாரம் செய்கிறது. இப்படிப் பகவானுடைய அவதார ரஹஸ்யத்தை அநுஸந்திக்கிறாப்போலே ஆசார்யனுடைய அவதார ரஹஸ்யத்தையும் அநுஸந்திக்கவேண்டுமென்பது ப்ரமாணஸித்தம். 1 'ந ஹ்ருதோ ... மனஸா கிரா ... காயகர்மபி: । ... ' 2 'தேவவதுபாஸ்ய: ஆசார்ய:', 3 'குரோர் நாம ஸதா ஜபேத்', 'போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்கு புகழ் சாற்றி வளர்ப்பதும்' இத்யாதிகளால் சொல்லப்பட்டதெல்லாம் சாஸ்திர சக்ஷுஸ்ஸான இவன் விழிகண் குருடனாகாமைக்கும் பகவதனுபவம் போலே விலக்ஷணமான இவ்வனுபவத்தை ஜந்ம பிக்ஷுவான இவன் இழவாமைக்கும் சொல்லிற்றத்தனை என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இங்கு 'விழிகண்குருடன்' என்றது கண்ணை விழித்துக்கொண்டிருக்கும் பொழுதே பார்க்க சக்தியில்லாமல் இருப்பது சொல்லப்படுகிறது, அதாவது படித்த முட்டாள், கற்றறிமூடன் என்றபடி. பகவானிடத்தில் போலே ஆசார்யனிடத்திலும் பக்தியிருக்குமவனுக்கே உபதேசம் செய்யப்பட்ட அர்த்தங்கள் ப்ரகாசிக்கும் என்று ச்ருதி உத்கோஷிக்கிறது. ஆகை

---

1. சிஷ்யன் குருவின் இடத்தில் வாக்கு சரீரம் மனது இவைகளினால் தன்னுடன் வ்யத்யாஸமாய் எண்ணாமல் இருந்து கொண்டு அவரிடத்தில் தவறுதல் செய்யக்கூடாது. பகவான் இடத்திலே போல இந்த ஆசார்யன் இடத்திலும் இருக்கவேண்டும்.

2. தேவதையைப் போல ஆசார்யனை உபாஸிக்கவேண்டும்.

3. குருவினுடைய நாமத்தை எப்பொழுதும் ஜபம் செய்யவேண்டும்.

யினால் பகவானுடைய அவதாரரஹஸ்யசிந்தனம்போலே ஆசார்யனுடைய அவதாரரஹஸ்யசிந்தனமும் நமக்கு அவச்யம் கர்த்தவ்யமாயிற்று.

அவதாரசிந்தனம் என்பதே போதுமானதாயிருக்க அவதார ரஹஸ்ய சிந்தனம் என்பதற்குத் தாத்பர்யம் என்ன என்று பராமர்சிப்போம். அவதாரத்தின் ப்ரயோஜனம் என்ன என்று அவதார வ்ருத்தாந்தங்களைப் பார்க்குமவர்களுக்கு ஒவ்வொரு அவதாரத்திலும் துஷ்டநிக்ரஹமே ப்ரதான ப்ரயோஜனமாய்த் தோன்றும். அது ஸஹஜமே. அவதாரங்களுக்கு ராவண கம்ஸாதி வதங்களே காரணமாகவும் 4 "ஸ ஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி꞉ । அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணு꞉ ஸநாதந꞉ ॥" என்றும், 5 'பூமிர்த்ருப்த ந்ருப வ்யாஜ தைத்யாநீக ஶதாயுதை꞉ । ஆக்ராந்தா பூரிபாரேண ப்ரஹ்மாணம் ஶரணம் யயௌ ॥' என்றும் அந்தந்தப் புராணங்களில் சொல்லப்பட்டது. பாஶ்சாத்யர்களும் க்ருஷ்ணாவதாரத்தில் அவதாரக்ஷணம் தொடங்கி பூதனை, சகடாஸுரன், யமளார்ஜுனன், கரிஷ்டன், ப்ரலம்பன், தேனுகன், காளியன், கேசி, குவலயாபீடம், சாணூரன், முஷ்டிகன், தோஸலன், கம்ஸன் முதலியவர்களைக்கொன்ற வ்ருத்தாந்தங்களைக்கேட்டு இது என்ன கொல்லும் தெய்வம் என்கிறார்கள். ஆகையினால் அவதார அநுஸந்தானம் என்றால் துஷ்க்ருத விநாசாநுஸந்தானமே போலும் என்று பலிக்கும். அது அவதாரத்திற்கு ப்ரதானமான ப்ரயோஜனமல்ல. ஆகையினால் அதின் ரஹஸ்யம் அறியவேண்டும். அதாவது அதற்குள் புகுந்து பார்க்கவேண்டும் என்று எம்பெருமான். அவதாரத்தின் ப்ரதான ப்ரயோஜனம் ஸௌசீல்ய ப்ரகாசனம் என்பதும், ஸாதுபரித்ராணம் என்பதும் ஆசார்யோபதேசத்தாலேயே அறியக்கூடியவை. ஆகையினால்தான் அவதார ரஹஸ்ய சிந்தனம் என்றருளிச் செய்யப்பட்டது. பகவான் தானும் தன்னுடைய அவதாரத்தின் ப்ரயோஜனத்தைச் சொல்லும் பொழுது 'பரித்ராணாய ஸாதூநாம்' என்று ஸாதுபரித்ராணத்தை முற்படச்சொல்லி அதுவே ப்ரதானம் என்று காட்டி, சகாரத்தினாலும், பிற்படச்சொல்

4. கொழுப்பையுடைய ராவணனுடைய வதத்தை வேண்டியிருந்த தேவதைகளினால் ப்ரார்த்திக்கப்பட்டவனாய் ஸநாதனனான அந்தவிஷ்ணு மனுஷ்ய லோகத்தில் அவதரித்தார்.

5. பூமியானவள் கொழுப்பையடைந்த ராஜாக்கள் என்கிற வ்யாஜத்தை உடைய அஸுரர்களின் கூட்டங்கள் அனேகங்களினால் உண்டான பொறுக்கமுடியாத சுமையினால் ஆக்ரமிக்கப்பட்டவளாய் ப்ரும்மாவை சரணமடைந்தாள்.

லியதாலும் துஷ்க்ருத விநாசம் அவாந்தர ப்ரயோஜனம் என்று அருளிச்செய்தான். 'முதல் தனிவித்தே', 'முதலில் சிதையாமே' என்கிறபடியே ஸகல லோகத்திற்கும் உபாதான காரணமாய் நின்று தன் ஸங்கல்பத்தினால் எல்லாவற்றையும் செய்யக்கூடிய பகவானுக்கு ராவணாதிகளை ஸம்ஹரிப்பதற்காக இந்த லோகத்தில் வந்து அவதரிக்கவேண்டும்' என்கிற நிர்ப்பந்தம் இல்லையிறே. ஸாதுபரித்ராணமோ அப்படிப்பட்டதல்ல. அவன் வந்தே செய்தாகவேண்டும். அது ஒரு ஆள் இட்டுச் செய்யக்கூடியதில்லையிறே. அந்தப் பகவானுடைய ஸேவையையே பரமபுருஷார்த்தமாகக் கருதி ஸ்வர்க்காதி ஐச்வர்யங்களையும் திரஸ்கரித்து விட்டு பகவான் எப்பொழுது ஸேவை ஸாதிப்பானோ என்று காத்திருந்த சபரி, சரபங்கர் முதலியவர்களைக் காப்பாற்றுவதற்கு அவன் தானே நேரில் வந்தாகவேண்டுமிறே. தன் வேலையாட்களை ஏவிக்கார்யம் செய்யக்கூடியதைச் செய்யத் தான் நேரில்வருவது யஜமானனுக்கு அழகல்லவே. துஷ்டநிக்ரஹத்தை ஆளிட்டு நிறைவேற்றக்கூடும். ஆகையினால் அதற்காகப் பகவான் அவதரித்தான் என்பது அவனுடைய பெருமையைக் குறைத்துச் சொன்னதாகும். 'ந மே த்வேஷ்யோऽஸ்தி ந ப்ரிய꞉' என்கிறபடியே தனக்கு ப்ரியனானவனும் த்வேஷியும் இல்லை என்னச் செய்தேயும் தன்னுடைய பக்தர்களுடைய விரோதிகளைத் தனக்குச் சத்துருவாகப் பாவிக்குமவனன்றோ அவன். 6 'மரணாந்தாநி வைராணி' இத்யாதி விபீஷணனுக்கு அருளிச்செய்தானிறே. 'பயிரில் களைபோல் அசுரரைக் காய்ந்தான்' என்று ஆசார்யனும் அருளிச்செய்தார். இப்படிப் பகவானுடைய அவதாரத்தின் தத்த்வார்த்தத்தை யுக்திகளைக்கொண்டு நிர்த்தாரணம் செய்யவேண்டும்படி இருக்கிறது. ஆசார்யர்களுடைய அவதாரவிஷயத்தில் இப்படிப்பட்ட ச்ரமம் ஒன்றுமில்லை, இவர்கள் அநுக்ரஹைக ஶீலர். நிக்ரஹம் என்பதையே அறியாதவர்கள். தன்னுடைய கண்ணைப் பிடுங்குவதற்குக் காரணமாக இருந்த நாலூராச்சானுக்கும் மோக்ஷம் கொடுக்கவேண்டும் என்று ஸ்ரீதேவப்பெருமாளை ப்ரார்த்தித்த கூரத்தாழ்வான் வ்ருத்தாந்தத்தினால் இது நன்றாக நிரூபிக்கப்பட்டதாகும். இந்த விசேஷம் தான் 'ஸ்ரீஶ தத்த்வ ஹ்ருத் யாமளம்' என்கிற இடத்தில் 'ஸ்ரீஶ:' என்னும் பதத்தினால் சொல்லப்பட்டது. இப்படி ஸாதுபரித்ராணத்தை ப்ரதான ப்ரயோஜனமாக உடைய பகவானுடைய ப்ரஸித்தமான எல்லா அவதாரங்களிலும் செய்யப்பட்ட ப்ரயோஜனங்கள் நம் ஆசார்யனுடைய ஒரு அவதாரத்தில் நடந்தேறி யிருக்கிறதை நம் பூர்வர்கள் ஒரு ச்லோகத்தில் அநுஸந்தித்துப் போந்தார்கள். அதாவது—

6. ஒருவனுடன் சத்ருவாய் இருப்பது அவன் சாகும்வரையில் தான்.

வேதே ஸஞ்ஜாத கேதே முநிஜந வசநே ப்ராப்த நித்யாவமாநே ஸங்கீர்ணே ஸர்வவர்ணே ஸதி ததநுகுணே நிஷ்ப்ரமாணே புராணே । மாயாவாதே ஸமோதே கலிகலுஷவசாச் சூந்யவாதே(அ)விவாதே தர்மத்ராணாய யோ(அ)பூத் ஸ ஜயது பகவாந் விஷ்ணு கண்டாவதார: ॥

வேதே ஸஞ்ஜாத கேதே—வேதத்திற்கு கேதம்உண்டானபொழுது பகவான் அந்த கேதத்தை மத்ஸ்ய ஹம்ஸ ஹயக்ரீவாதி அவதாரங்கள் எடுத்துத் தீர்த்தான். 7 "நிமக்ந ச்ருதிஜால மார்க்கண தீக்ஷிதேக்ஷணை:" என்றிறே வேதத்தைத் தேடிக்கொடுத்ததே மத்ஸ்யாவதாரத்துக்கு ப்ரயோஜனம் என்றுசொல்லப்பட்டது. இப்படியே ஹம்ஸாவதாரத்திலும் ஹயக்ரீவாவதாரத்திலும் வேதத்திற்கு உன்டான கேதத்தைத்தீர்த்தான். இதரர்கள் வேதத்திற்கு அபார்த்தங்களை கல்பித்து அதற்கு உபத்திரவத்தை உண்டாக்கின காலத்தில், ஸ்வாமி அவதரித்து அவைகளுக்கு ஸரியான அர்த்தங்களை நிரூபித்து அவைகளுக்கு உண்டான கேதத்தை நிவர்த்தி செய்தருளினர். 8 'ப்ரஹ்மத்வேஷி குத்ருஷ்டி கல்பித ப்ருதக்ஸித்தாந்த ஸாஜாத்ய [illegible] ப்ரத்யேக: [illegible] சததா விபிந்ந சிரஸ: ஸந்தாநவேதாய ய: । ஸந்தாநாய [illegible] க்ருதி [illegible] ஸ்ரீமாந் வேங்கட தேசிகோ விதரதாந் ந: த்ரய்யந்த ஸம்பதம் ।' என்னப்பட்டதிறே. முநிஜந வசநே ப்ராப்த நித்யாவமாநே-முனிஜனங்களுடைய வார்த்தைக்கு அவமானம் நித்யமாய் ஏற்பட்டபொழுது. ரிஷிகளின் வாக்யத்தை அஹங்கார மமகார ப்ரயுக்தர்களாய் ஹிரண்யாதிகள் அவமானம் செய்தபொழுது ந்ருஸிம்மாத்யவதாரங்களை எடுத்து அந்த வார்த்தைகளை நிலைநிறுத்தினைப் போலே ஸ்வாமியும் வ்யாஸர், வால்மீகி, சுகர் முதலியவர்களுடைய ஸ்ரீஸூக்திகளின் பெருமையை யதாவத்தாக வெளிப்படுத்தி அவர்களுடைய வாக்கு

7. ஸமுத்திரத்தில் முழுகியிருக்கிற வேதங்களைத் தேடுவதில் ஸாவதானத்தை உடைய பார்வைகளினால்.

8. பரமாத்மாவின் இடத்தில் த்வேஷம் உடையவர்களான குத்ருஷ்டிகளினால் உண்டாக்கப்பட்ட தனித்தனியான ஸித்தாந்தங்களுக்கு ஒத்தாசையாய் இருக்கிற குதர்க்கங்களினால் அனேகம் விதமாகப் பிளக்கப்பட்ட தலையை உடைய, அதாவது உபநிஷத்துக்களுக்கு ஒன்றுக்கொன்று விரோதமாகும்படி அர்த்தம் சொல்லப்பட்ட வேதத்திற்கு உண்டான வேதனையைப் போக்கடிப் பதற்காக அவைகளை ஒன்று சேர்ப்பதில் உத்ஸாஹத்தை உடையவராய் எவர் பூமியில் அவதரித்தாரோ அப்படிப்பட்ட ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் நமக்குவேதாந்தஜ்ஞானமாகிற ஸம்பத்தைக் கொடுக்க வேண்டும்.

க்கு ஏற்பட்டிருந்த அவமானத்தைப் போக்கடித்தார். 9 'நாநாதந்த்ர விமோஹிதைர் [illegible] நிர்ணீத [illegible] கஷ்டம் [illegible] ஸ்ரீபாஷ்யக்ருதாம் [illegible] । வ்யாஸோ ஹாஸபதீக்ருத: [illegible] வால்மீகி: [illegible] சுக: [illegible] போதாயந:' என்று ஸ்ரீபாஷ்யகாரர் விஷயத்தில் இந்த ஆசார்யன் அநுஸந்தித்தது இவர் விஷயத்தில் கைமுதிக ந்யாய ஸித்தமிறே. ஸூத்திரகாரர் போதாயனர் முதலியவர்களுடைய ஸ்ரீஸூக்திகளை மேற்கோளாகப்பல இடங்களில் எடுத்துக்காட்டி அவர்களைப் பஹுமானம் செய்திருக்கிறார். அப்படியே வால்மீகி பகவானுடைய ராமாயணத்திற்கு சரணாகதி வேதம் என்று பெயரிட்டு அபயப்ரதானஸாரம் என்னும் க்ரந்தத்தில் மிகவும் ஸாரம்சமான அர்த்தங்களைப் பரக்க நிரூபித்தருளினார். இப்படி இவர் ராமாயணத்தின் தாத்பர்யார்த்தத்தையும், அதில் ப்ரதிபாதிக்கப்படும் தத்வார்த்தத்தையும் (த்ருப்யத் தசேந்த்ரியாநந மநோநக்தஞ்சராதிஷ்டிதே தேஹே(அ)ஸ்மிந் பவஸிந்துநா பரிகதே தீநாம் தசாம் ப்ராப்நுவந் । [illegible] ஆச்வாஸாய [illegible] ஜீவ: ஸீதேவ [illegible]' (கர்வத்தினால் அதிகரித்த பத்து இந்திரியங்களாகிற பத்துத் தலைகளையுடைய மனதாகிற ராவணனால் அதிகாரம் செலுத்தப்பட்டதாயும் ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தினால் சூழப்பட்டதாயும் இருக்கிற இந்தத் தேஹத்தில் தீனமான தசையை அடைந்தவனாயும், அந்தஸமயத்தில் ஹனுமானுக்கு ஸத்ருசமான ஆசார்யனால் தெரிவிக்கப்பட்ட அர்த்தங்களை உடையவனாயு மிருக்கிற இந்த ஜீவாத்மா லங்காபட்டணத்தில் காவலில் வைக்கப்பட்ட ஸீதையைப்போல் அழுதுகொண்டிருக்கிறான்) என்றிவை முதலிய ச்லோகங்களில் ப்ரதிபாதிக்காவிடில் ராமாயணம் கேவலம் ஒரு ரோதன க்ரந்தமாய்விடும். 10 'வ்யாஸ [illegible]

9. அனேக சாஸ்திரங்களினால் கலக்கப்பட்ட மனதினால் கெட்ட ந்யாயங்களை நிச்சயம் செய்திருப்பவர்களாயும் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகளில் பரிசயம் இல்லாதவர்களாயும் இருப்பவர்களினால் வ்யாஸர் பரிஹாஸத்திற்குப் பாத்திரராக்கப்பட்டார், வால்மீகி மனதில் நின்றும் விலக்கப்பட்டார், சுகர் விளையாட்டிற்கு வளர்க்கும் கிளிப்பிள்ளையாகச் செய்யப்பட்டார், அப்படிப்பட்ட போதாயனரும் வீண் ச்ரமத்திற்குப் பாத்திரராக்கப்பட்டார்.

10. வ்யாஸரை ரொம்பவும் வ்ருத்தியடைந்த வாக்விலாஸத்தை உடையவராயும், வால்மீகியை ஸந்தோஷத்துடன் கூடிய மனதை உடையவராயும், போதாயனரை ஒருவராலும் கண்டிக்கப்படாத புத்திக்கு இருப்பிடமாயும் (தன்னுடைய வாக்குகளினால் செய்த (ளிரு)

ஃவிஃரு ஃஂஷிக வெகவோ-வெபாயாயகவேஹவணிக வொயாபகம் ' இத்யாதிகளை இவர் திறத்தில்பின்புள்ளார் அனுஸந்தித்தார்களிறே. ப்ரஹ்லாதனுடைய வார்த்தையை அவமானம்செய்த ஹிரண்யனை நிராகரிப்பதற்காக பகவான் ஒரு நரஸிம்மரூபியாய்த் தோன்றினாப்போலே வால்மீகி, வ்யாஸர், சுகர், போதாயனர் முதலிய மஹர்ஷிகளினுடைய வார்த்தைகளுக்கு மாயாவாதிகளினால் உபரோதம் உண்டாகவே ஸ்வாமி கவிதார்க்கிக ஸிம்ஹமாய் ஓர் அவதாரம் செய்தருளி அவர்கள் ஸூக்திகளுக்குக் கௌரவத்தை ஸ்தாபித்தருளினார் என்றபடி. வஹீ்ணொ வவஃ வணொவதி - வர்ணங்களுக்குள் ஸாங்கர்யம் ஏற்பட்டிருக்கும் பொழுது. கேவலம் த்ருதீய புருஷார்த்தத்தில் ஆசைவைத்தவர்களாய் தேவஸ்திரீகள் கந்தர்வஸ்திரீகள் முதலானவர்களைச் சிறைப்பிடித்து வைத்த ராவணாதிகளை நிரஸிப்பதற்காக சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்தருளினான். 11 'ஶமொ விஶு ஹவாநு', 'ஶொவிஶு ஹவாநு யஶ' இத்யாதிகளை அனுஸந்திப்பது. அதைப்போல கலியுகத்தின் ஸ்வபாவத்தினால் வர்ணாச்ரம தர்மங்களைக் குலைத்துப் பாகவதர்கள் எல்லோரும் ஒரே ஜாதி, வ்யத்யாஸமில்லை. என்றிவை முதலிய படிகளில் வர்ணஸாங்கர்யத்தை உண்டாக்கினபொழுது ஸ்வாமி அவதரித்தருளி பகவத் பக்தர்கள் என்கிற பெருமை மானஸிக கௌரவத்திற்கு மாத்திரமே, வ்யவஹாராதிகளுக்கு ஜன்மத்துடன் கூட ஏற்பட்ட ஜாதிபேதங்கள் ஒரு நாளும் மாறாது, அதற்கு அனுகுணமாகவே நடவடிக்கைகளை நடத்தவேண்டும் என்று நிர்த்தாரணம் செய்தருளினார். தடிநாஶணெ நிஷ்ஶணெ வாஶணெ - மேற்சொல்லிய வர்ண ஸாங்கர்யத்திற்கு அனுகுணமாக நிஷ்ப்ரமாணமான புராணங்கள் ஏற்பட்டபொழுது. அன்றிக்கே அதை அனுஸரித்து வர்ணாச்ரம தர்மங்களைச்சொல்லும் புராணங்கள் எல்லாம் நிஷ்ப்ரமாணமாய்ப்போனபொழுது என்றாகவுமாம். அதாவது வர்ணஸாங்கர்யத்தை ப்ரதிபாதிக்கும்படியாய்ப் புதிதாய்ப் பல புராணங்கள் கல்பிக்கப்பட்டபொழுது, அன்றிக்கே வர்ணஸாங்கர்யத்தைச் சொல்லாமையினால் புராணங்கள் ப்ரமாணங்களற்றவை என்று ஏற்பட்டபொழுது, காலத்திற்கனுகுணமாக தர்ம சாஸ்திராதிகள் மாறவேண்டும் என்று பரவி நிற்கும்பொழுது ஸ்வாமி அவதாரம் செய்து அப்படிப்பட்ட புராணங்கள் தாமஸபுராணங்களாகையினால் அநாதரணீயம் என்றும் வேதத்திற்கு அனுகுணமான ஸாத்விகபுராணங்களே உபாதேயங்கள் என்றும் நிஷ்கர்ஷம் செய்தருளினார். ஶயாவாதெ ஸஶொதெ - மாயாவாதம்

11. ராமன் தர்மமே உருவெடுத்தவர்.

ஸந்தோஷத்துடன் கூடியிருக்கும்பொழுது. இப்படி வர்ணஸாங்கர்யமும் புராணங்களில் அவகம்பிக்கையும், மாயாவாதத்தில் ஸ்திரமான புத்தியும் உண்டான காலத்தில் ஸ்ரீக்ருஷ்ணனாய் அவதரித்து ஸ்ரீகீதையில் வர்ணஸாங்கர்யத்தினால் நேரிடும் தோஷங்களைப் பரக்க நிரூபித்து, நாஸ்திக்ய புத்தி ஏற்கனவே இருந்து வந்தது என்பதை 12 'ஜஷிஃ பஹாயாதீதம் ' இத்யாதிகளில் ஸூசிப்பித்துப் பரதத்வாதி விஷயங்களில் நிஷ்க்ருஷ்டமான அர்த்தத்தை உபதேசித்தருளினாப்போலே ஸ்வாமியும் அவதரித்து ஸ்ரீசததூஷணீ முதலிய க்ரந்தங்களில் மாயாவாதத்தை தலையெடுக்க வொட்டாமல் முற்றிலும் கண்டித்து உபகாரம் செய்தருளினார். கஃகஷவஶாக ஶூநூவாஜெ விவாதெ - கலியின் கோலாஹலத்தினால் சூன்யவாதம் அவிவாதமாய் நிற்கும் பொழுது கல்கி அவதாரம் எடுத்து 13 'கலிகயா காஷு கஜஷ: ' என்கிறபடியே அவற்றைப்போக்கடித்தாப்போலே ஸ்வாமி அவதரித்து மாயாவாதத்தைக் கண்டித்த சூந்யவாதியையும் பரமபதபங்கம் முதலிய க்ரந்தங்களில் தோற்கடித்து உபகாரம் செய்தருளினார். 14 'கஊளவெஙட நாயக: ' என்கிற அவதாரமேன்மையும் 15 'கவிஓதஃ கஶஂநம் ஷஶஂதம் நஃ ' என்று நிர்த்தாரணம் செய்தமையினால் ஏற்படுகிறது. இப்படிப் பகவான் ப்ரஸித்தமான பல அவதாரங்களை எடுத்து அவற்றில் செய்தருளின உபகார விசேஷங்களையெல்லாம் இந்த ஸ்வாமி தம் ஒரு அவதாரத்திலே செய்தருளினார் என்று காட்டப்பட்டது. ஸ ஜயதா ஹஂவாநு விஷ்ணுவணாவதாரஃ அப்படிப்பட்ட இந்த ஆசார்யன் ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்குவாராக என்றபடி.

இவருடைய அவதாரத்தின் பெருமையை இவருக்கு முன்னோர்களும் ஜ்ஞானத்ருஷ்டியால் அறிந்து இப்படி ஒரு ஆசார்யன் அவதரிக்கப்போகிறார் என்னும் அர்த்தத்தைத் தங்களுடைய க்ரந்தங்களில் ஸூசிப்பித்திருக்

12. ரிஷிகளினால் பலவிதமாகச் சொல்லப்பட்டது.

13. கலியினுடைய ப்ரஸ்தாவத்தினால் உண்டான கலகத்தை வேருடன் போக்கடிக்கிற.

14. கலியுகத்தில் வேங்கடநாயகன் விசேஷமஹிமை யுடையவன்.

15. எல்லாவிதமான இருட்டையும் (அஜ்ஞானத்தையும்) போக்கடிக்கக்கூடிய மதம் நம்முடையமதம்.

கிருர்கள். ஆசார்யத்வாத்ரிம்சத் என்னும் க்ரந்தத்தில் 16 ' [illegible] ' என்று பின்புள்ளார் விசதமாக அநுஸந்தித்தபடியே தொண்டைமான் சக்ரவர்த்தி திருவேங்கடமுடையானுக்கு அந்தரங்க அடிமைகள் அனேகம் செய்து அவருடைய ப்ரீதியை ஸம்பாதித்துக் கலியுகத்தில் ஜனங்களுக்கு உத்தாரகமான அர்த்தத்தை உபதேசித்தருள வேண்டும் என்று கேட்டபொழுது அவனுக்கு ' ஸ்ரீமாந் ' என்ருரம்பிக்கும் இவர் விஷயமான தனியனே ச்ரேயஸ்கரமானது என்று உபதேசித்தார் என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. திருமங்கையாழ்வாரும் இவ்வருத்தாந்தத்தை ' துளங்கு நீண்முடி யரசர்தம் குரிசில் தொண்டைமன்னவன் திண்திறல் ஒருவர்க்கு உளங்கொளன்பினேடு இன்னருள் சுரந்து அங்கொடு நாழிகையேழுடன் இருப்ப வளம்கொள் மந்திரம் மற்றவர்க்கு அருளிச்செய்தவாறு அடியேனறிந்து உலகமளந்தபொன்னடியே யடைந்துய்ந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே ' என்று அருளிச்செய்தார். ஸ்ரீபரகால ஸ்வாமி வ்யாக்யானத்தில் 'வளம்கொள்' என்பதற்கு வளப்பத்தை கொண்டிருக்கிற அதாவது 'ஸ்ரீமாந்' என்று ஆரம்பிக்கும் தனியனை என்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. நம்மாழ்வாரும் திருவிருத்தத்தில் 'நானிலம் வாய்க்கொண்டு நன்னீரற மென்று கோதுகொண்ட வேனிலஞ்செல்வன் சுவைத்துமிழ்பாலை கடந்த பொன்னே! கால்நிலம் தோய்ந்து விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகாவுது அம்பூந் தேனிளஞ்சோலை அப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே ' என்கிற பாட்டில் இவ்வர்த்தத்தை ஸூசிப்பித்தருளினர். இதற்கு ' இப்பாசுரத்தில் கீழ் ஸம்ஸார ஸ்திதியாலும் பகவதலாபத்தாலும் அத்யந்த வ்யாகுல சித்தரான ஆழ்வாரை பாகவதர் திவ்ய தேசங்களைக்காட்டித் தேற்றின பாசுரத்தை நீரும் நிழலும் இல்லாத பாலைநிலத்தில் நடந்து இளைத்த நாயகியைக் குறித்து நாயகன் தேற்றும் உக்தியாலே அருளிச்செய்கிருர்' என்று

16, பெரியோர்களால் கொண்டாடத்தகுந்தவராயும், பாபத்துடன் சேர்ந்தபுத்தியை உடையவர்களுக்கு மிகவும் தூரத்தில் இருப்பவராயும் இருக்கிற அந்த வேதாந்த தேசிகனை நான் ஸேவிக்கிறேன், எவர்விஷயமாய் பூர்வாசார்யர்களினல் செய்யப்பட்ட ' ஸ்ரீமாந் ' என்ருரம்பிக்கும் மந்திரத்தை (தனியனை) இந்தப் பூலோகத்தில் கலியுகத்தில் நன்மையைச் சொல்லும் என்றுகேட்ட தொண்டைமான் சக்ரவர்த்திக்குத் திருவேங்கடமலையில் ஸ்ரீநிவாஸன் இது நன்மையைக் கொடுக்கக்கூடியது என்று உபதேசம் செய்தாரோ.

அரும்பதத்தில் தாத்பர்யம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இங்கு நாயகியின் தன்மையை அடைந்தது ஆழ்வார். அவர்காமுற்ற தலைமகன் பாகவதர்கள். ஆழ்வாரை ஆச்வாஸிப்பிக்கும் ப்ரகாரம் ' [illegible] ' என்கிறபடியே ப்ரும்மலோக பர்யந்தமான ஸகல ஸம்பத்தும் நச்வரமானபடியைக்கண்டு இவைகளைவிட மேல்பட்ட தேசம் நமக்கு ஆச்வாஸகரபூமியாய் நிற்கிறது என்று நிருபிப்பது. தேவதைகள் ஹவிர்பாகத்தில் ஆசையினல் இந்தலோகம் நரகம்போல் இருந்தாலும் மூக்கைப் பிடித்துக்கொண்டு வந்தாவது அதைப்பெற்றுப் பேகிருர்கள், அப்படிப்பட்ட தேவதைகளின் ஸ்தானமாகிய ஸ்வர்க்கலோகமும் நரகமென்னலாகும்படியான மேன்மையை உடைய மோக்ஷத்தில் இருக்கும் ஸூரிகள் பகவான் ஆவிர்பவித்திருக்கும் தேசம் இது என்கிற கௌரவத்தினலே கால்பாவி நின்று அவனை அநுபவிக்கிருர்கள், அப்படிப்பட்ட தேசம் இதோ இருக்கிறது, இது தான் திருவெஃகா என்று காட்டி ஆழ்வாரை ஆச்வாஸம் பண்ணுகிறபடி. அதற்கடுத்தாப்போல் அழகிய பூக்களினலும் தேன்களினலும் நிறைந்த சீதளமான சோலைகளையுடைய திருத்தண்கா இருக்கிறது என்கிருர். ' எப்பாலைக்கும் சேமத்ததே ' என்று விசேஷித்திருப்பதினல் முந்தின திருவெஃகாவைக்காட்டிலும் திருத்தண்கா விசேஷ மஹிமை உடையதாயிருக்க வேண்டும் என்ருராயிற்று. அப்படிப்பட்ட மஹிமை எதாய் இருக்கலாம் என்று ஆராய்ந்தால் ' [illegible] ' என்கிறபடியே ஆசார்யனே நமக்கு இந்த லோகத்திலும், மோக்ஷத்திலும் மிகவும் உத்தேச்யமாகையினல் அப்படிப்பட்ட இவர் அவதரிக்கப் போகிருர் என்பதை கணிசித்து இவருடைய திருவவதார ஸ்தலமாகிய திருத்தண்காவை நிரூபித்தருளினபடி என்பது ஏற்படும். தூப்புல் என்பது இவருடைய அவதாரகுலத்தின் திருநாமம் என்பதும், இவருடைய அவதார ஸ்தலம் திருத்தண்கா என்றும் ஹிமவனம் என்றும் சொல்லப்படும் விளக்கொளி யெம்பெருமான் ஸந்நிதி என்பதும் முன்பே பல இடங்களில் நிருபிக்கப் பட்டிருக்கிறது. இங்கு ஆழ்வார் காமுற்ற பாகவதர்களால் அதிஷ்டிதமான தேசத்தைக் காட்டி அவருக்கு ஆச்வாஸம் உண்டாக்கவேண்டியிருப்பதினல் மற்ற திவ்யதேசங்களை விட்டு பொய்கையாழ்வார் அவதரித்த திவ்யதேசமாகிய திருவெஃகாவை முதலில் காட்டி அதைவிட மிகவும் உத்க்ருஷ்டமாய் இந்த ஆசார்யன் அவதரிக்கப்போகிற ஸ்தலமான திருத்தண்காவை ' அம்பூம் ' இத்யாதியால் காட்டுகிறபடி. இதற்கு அருகிலுள்ள

மற்றத் திவ்ய தேசங்களுக்கு இப்படிப்பட்ட பெருமை இல்லை யாகையினால் அவைகளை விட்டுவிட்டு இந்த இரண்டு க்ஷேத்திரத்தையுமே இங்கு குறிப்பிட்டபடி என்பது அறியத்தக்கது.

ஸ்ரீபாஷ்யகாரரும் தம்முடைய அந்திமகாலத்தில் தம்முடைய சிஷ்யர்களின் துக்கத்தைப் பார்த்துக் கொங்குப் பிராட்டியிடம் போய்க் கேட்டு ஸந்தேஹம் தெளிந்து கொள்ளுங்கள் என்று நியமித்தார். இவருடைய வ்ருத்தாந்தத்திலும் ஸ்வாமியினுடைய அவதாரம் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாஷ்யகாரருடைய சிஷ்யகோடியில் ஒருவள் கொங்குப்பிராட்டி என்பவள். வேதமேவடிவு கொண்டிருந்தவள். அவளைப்போய் சிஷ்யர்கள் கேட்டதும் அவர்களை எல்லாம் உட்காரவைத்துவிட்டு தான் உள்ளேபோய் எண்ணை, சீப்பு, ஒரு சிவந்தகயிறு, ஒரு வெள்ளைக்கயிறு இவைகளைக் கொண்டுவந்து வைத்து திண்ணையில் உட்கார்ந்து அலங்கோலமாய்க்கிடந்த தன்னுடைய தலைமயிரை எண்ணைதடவி வாரி ஒழுங்காக முடித்து முதலில் சிவப்புக்கயிற்றினால் கட்டி மறுபடியும் வெள்ளைக் கயிற்றினால் கட்டிவிட்டு, வந்திருந்தவர்களை மறுபடியும் தண்டன் ஸமர்ப்பிவித்து நீங்கள் போகலாம் என்று சொல்லியனுப்பிவிட்டாள். இதன் அர்த்தத்தை தெரிந்துகொள்ளாமல் சிஷ்யர்கள் எல்லோரும் வருத்தத்துடன் ஸ்ரீபாஷ்யகாரரிடம் வந்து நடந்த வ்ருத்தாந்தத்தைச்சொல்ல அவர் அப்பொழுது அதின் தாத்பர்யத்தை எடுத்துக்காட்டினார். அதாவது வேதத்திற்கு உண்டாயிருந்த வைதவ்யகேதத்தை நிவ்ருத்திசெய்து வேதங்களை ஐககண்ட்யம் பண்ணி 'ஸலில ஸ்ருதிஹிதம் நாதிநீர்ஜீவம்ஶீதம்' என்னும்படி நாம் ஆக்கினோம் என்பதை நம்முடைய துரீயாஸ்ரமத்தைக் காட்டும்படியான சிவப்புக்கயிற்றினால் கட்டிக் காண்பித்தாள். ஒரு கட்டு ஆனபடியினால் இதற்குப் பின்னால் அவிழ்தல் நேரிடக்கூடுமே என்கிற ஸங்கையை நிராகரிப்பதற்காக நாமே க்ருஹஸ்தாஸ்ரமியாய் ஒரு அவதாரம் எடுத்து ஒருவராலும் கலைக்க முடியாமல் இரண்டு முடியாய்ப் போடப்போகிறோம் என்பதை இரண்டாவது வெள்ளைக் கயிற்றால் கட்டிக் காண்பித்தாள்—என்று. இதைத்திருவுள்ளம் பற்றியே நைனாராசார்யரும் 'யதீந்த்ராம்ஸோ வேதேவம்' என்று அருளிச்செய்தார். இவருடைய அவதார வ்ருத்தாந்தம் ப்ரும்மாண்டபுராணத்தில் 'ஸௌவர்ணே ஹேமநே கேது ஜைஷி வடிணாம்ஸகோ ஹரே: । தவஸ்ருதி ஸிரஸ தது ஸிஸிம் வ்ருவேதா ஸவிஷ்யதி ॥' என்று ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. இவருடைய வைபவத்தை ப்ரகாசம் செய்யும்

பிள்ளை யந்தாதியில் இவருடைய அவதாரத்தை நிரூபிக்கும் இடத்தில் 'அன்றிவ்வுலகினையாக்கி யரும்பொருள் நூல்விரித்து நின்று தண் நீள்புகழ் வேங்கடமாமலை மேவிப் பின்னும் வெஃறிபுகழ் திருவேங்கடநாதன் என்னும் குருவாய்நின்று நிகழ்ந்து மண்மேல் நின்றநோய்கள் தவிர்த்தனனே' என்று அருளிச்செய்திருக்கிறபடியினால் இவர் ஸாக்ஷாத் ஸ்ரிய:பதியின் அவதாரம் என்பதை ஸ்பஷ்டமாக அருளிச்செய்தார். இவரைத் திருவேங்கடமுடையானுடைய கண்டாவதாரம் என்று சொல்லுவது சக்ரவர்த்தித்திருமகன் பாயஸம் என்கிற வ்யாஜத்தைக்கொண்டு அவதரித்ததைப்போல இவருடைய தாயார் தகப்பனார் அப்படித் திருவேங்கடமுடையான் தம்முடைய ஸுவர்ணகண்டையை தமக்குக்கொடுத்ததாக ஸ்வப்நம் கண்ட வ்ருத்தாந்தத்தைத் திருவுள்ளம் பற்றியே 'கண்டாம்ஸோ வா ஹவேது' என்றநுஸந்திக்கப்பட்டது.

ஆக இப்படிப்பகவானுடைய அனேக அவதார ரஹஸ்யத்தை சிந்தனை செய்வதினால் என்னபலன் நேரிடுமோ அது இந்த ஒரு ஆசார்யனுடைய அவதார ரஹஸ்ய சிந்தனத்தினால் ஏற்படுமோகையினால் அங்கே போய் ஸ்ரமப்பட வேண்டாம், ஸ்ரீ தேசிகனையே ஆச்ரயியுங்கோள் என்று முதலில் விஜ்ஞாபனம் செய்துகொண்டேன்.

மைலாப்பூர், }
8—2—25 }

ஓர் தேசிகபக்தன்.

ஸ்ரீ:

அருளிச்செயல்களும் இசையும்.

ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரனது அபிநவ தசாவதாரங்கள் என்னலாம்படி அப்பகவானது ஸ்ரீவத்ஸ, கௌஸ்துப, வைஜயந்தி, பாஞ்சஜன்ய, ஸுதர்சன, கதா, நந்தக, சார்ங்க, கருட, விஷ்வக் ஸேநாதிகளின் அம்சமாய், இவ்விருள்தரு மாஞாலத்திலே "பன்மாமாயப் பிறவியிலே, பல்லூழி காலம் நோவுபட்டுக்கிடந்து", லோக போகங்களிலே ஆழ்வார்களான சேதனர்களை, பகவத்பக்தியிலே ஆழ்வார்களாக மாற்றி, ஜகத்தை வாழ்வித்தருளிய ஆழ்வார்கள் பதின்மருடையவும், 'சூடிக்கொடுத்த சுடர்கொடி' யாம் ஆண்டாளுடையவும், "குருகூர்நம்பி - பாவினின்னிசை பாடித்திரியும்" மதுரகவிகளுடையவும், அருளிச்செயல்களான திவ்ய ப்ரபந்தங்கள், கேட்கக்கேட்க கர்ணாம்ருதமாயும், பாடப்பாட பக்தியைப் பெருக்கியும், பகவத் பக்தர்களுக்கு பரமானந்தத்தை ஊட்டாநின்றன. எனினும், முதலாழ்வார்கள் தொடக்கமான ஆழ்வார்களாலும், நாதமுனிகள் தொடக்கமான ஆசார்யர்களாலும், நமக்கு எங்ஙனம் ஸாதிக்கப்பட்டனவோ, அங்ஙனமே இக்காலத்திலே அத்திவ்ய ப்ர

பந்தங்களை "இயலும் இசை" யுமாக ஸேவிப்பது வெகு அபூர்வமாய்விட்டது. (இவ்விடத்தில், ஸ்வாமிகள் வேறு விதமாக க்ரஹித்துக்கொள்ளக் கூடாது; உதாத்த, அநுதாத்தாதி ஸ்வர ஸஹிதமாக உச்சரிக்கப்படும், ருக், யஜுஸ், ஸாம, அதர்வணாதி சதுர் வேதங்களைப்போலே, த்ராவிட வேதங்களையும், அத்யாபக முறையில் ஸேவித்து வருவதைப்பற்றி, குறைகூற எழுந்ததன்று இவ்யாஸம், அதுவிஷயத்தில், அபிப்ராயம் கூற, அடியேன் அர்ஹன் அல்லேன்; சக்தனும் அல்லேன், ஆகையால் பகவத் ஸந்நிதிகளிலேயும், க்ருஹங்களிலேயும், பூர்வாசார்யர்கள் திருவுள்ளப்படியே, 'இயலும் இசையு' மாக, திவ்ய ப்ரபந்தங்களை, இன்பம் பெருக, மனம் உருக, உடல் புளகமுற, ஸேவிப்பதையே விஜ்ஞாபித்துக் கொள்ளப்போகிறபடி:—)

நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸத் ஸம்ப்ரதாயத்திற்கும், ஸங்கீத சாஸ்த்ரத்திற்கும் ஸம்பந்தமிருப்பது ஆழ்வாராசார்யர்கள் காலத்திலிருந்து மட்டுமன்று, நமது பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்திற்கு, ஸர்வோத்க்ருஷ்டமும் மாத்ருத்வமும் வஹிக்கும் ஸ்ரீ கீதா உபநிஷத்தை, அர்ஜுனனை வ்யாஜமாக வைத்துக்கொண்டு, ஸாதித்தருளிய கண்ணபிரான் காலத்திலேயே நெருங்கிய ஸம்பந்த மிருந்தது. எங்ஙனே யெனில், திருவாய்ப்பாடியில் ஷட்ஜம, ருஷப, காந்தார, மத்யம, பஞ்சம, தைவத, நிஷாதாதி ஸப்த நாமங்களையுடைய, ஏழு கோபிமார்கள், துலா, தனுர், கும்ப, மீன, ருஷப, கடக, ஸிம்ஹ என்கிற ஏழு வீடுகளிலும் நின்று, 'ஹரிகாம்போதி' யை ஆதியாக வைத்துக்கொண்டு, 'ஸரிகமபதநி' எனும் ஸப்த ஸ்வரங்களையும், மாறிமாறிப் பாடி, கும்மியடித்து, கோபாலக்ருஷ்ணனை ஸந்தோஷிப்பித்து, தங்கள் மனோபீஷ்டங்களை அடையப்பெற்றார்கள். (இவ்விருத்தாந்தம், 'செந்தமிழ்ப் பெருங்காப்பிய'ங்களுள் ஒன்று என்னப்படும் 'சிலப்பதிகார'த்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.)

"பத்துடையடியவர்க் கெளிய" னை பரந்தாமனை, திருவுள்ளம் உகப்பித்து, அவன் திருவருளைப் பெறுவதற்கு, மற்றெல்லாவழிகளைக் காட்டிலும் சிறந்ததும் பரம ஸுலபமுமான வழி அவன் ஸந்நிதியிலே நின்று, வீணை முதலிய இன்னிசைக் கருவிகளைக் கொண்டு, தன்னை மறந்து, பகவத் கல்யாண குண வைபவங்களிலே ஈடுபட்டு, மனம் உருகி, இன்னிசை பாடுவதே. "மாறன் அருளிய தமிழ் மறைகட்கு ஆறங்கம் கூற அவதரித்த" திருமங்கை மன்னனும், ஸாக்ஷாத் ரங்கநாதனோடு ஸரஸ ஸல்லாபம் செய்யும் பாக்யத்தை பெற்றது 'திருநெடுந்தாண்டக'த்தை தேவகானத்திலே அமைத்து மனமுருகப் பாடியதாலன்றோ! ப்ரதிதினமும், தன்னை நோக்கி இன்னிசை பாடிப்பாடி உருகி திருவுள்ளத்தைக் கவர்ந்து கொண்டமையாலன்றோ ஸ்ரீரங்கநாதன், மற்றெல்லா ஆழ்வார்களைக் காட்டிலும், "காண்பனவும் கேட்பனவும் மற்றொன்றின்றி கண்ணனையே கட்டுரைத்த கடியநாதப் பாண்பெருமா'ளெனும் திருப்பாணாழ்வாரை விசேஷ கடாக்ஷஞ்செய்து, தனது திருவடிகளிலே அத்திருமேனியோடேயே கலந்துகொண்டருளினன்! 'ஏனத்

துருவாயிடந்த ஞானப்பிரானை யல்லா லில்லைநான் கண்டநல்ல" தென்று நம்மாழ்வாராலே பெரிதும் ஈடுபட்டவரும், "காவுமிரண்டுள வாய்த்து நாகணையார்க்கே" என அஞ்ச வேண்டாதே, "மாசுடம்பில் நீர் வாரா மானமிலாப்பன்றியாம் தேசுடையதேவர் திருவரங்கச் செல்வனார் பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே" என்னலாம்படி, தப்பாத வார்த்தை அருளிச்செய்பவருமான ஸ்ரீ வராஹ நயினார், 'யஸ்து காயதி மத்பக்த்யா கைசிகம் ஸந்நிதௌ மம। ஸதாரயதி ஸர்வான் வை ப்ரஹ்மரக்ஷஸம் யதா॥ — (யாவனொருவன் பக்தியோடேகூட, நம்முடைய ஸந்நிதியில் வந்து, 'கைசிகம்' என்னும் பண்ணைப் பாடுகிறான், அவன் ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸை உத்தரிப்பித்த நம்பாடுவானைப்போலே, தன்னை ஆச்ரயித்தவர்களை உத்தரிப்பன்) என நாய்ச்சியாரைப் பார்த்து, அருளிச்செய்யலாம்படி நிற்பதாலும், இன்னிசைபாடி உய்ந்துபோதல் (உஜ்ஜீவித்தல்), பகவத் க்ருபையை ஸம்பாதித்து தரும் மற்றெல்லா ஸாதனங்களிலும், ஸர்வோத்க்ருஷ்டமானது என்பதை சொல்லவும் வேண்டுமோ?

ஒருவகையில், கீர்வாண வேதங்களைக் காட்டிலும், ச்ரேஷ்டமானவைகளாயும், பகவானுக்கு முன்னே செல்லும் பேறு பெற்றவைகளுமான, அருளிச்செயல்கள், பாசுர ரூபமாக மட்டு மல்லாமல், ராகதாளங்களோடு இணைத்துப் பாடலாம்படியாக வன்றோ பூர்விகர்களால் உதவப்பட்டிருக்கின்றன! வீரநாராயணபுரத்தில், திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மன்னார் நியமனத்தால், தேவகானம் தெரிந்த ஸ்ரீமந்நாதமுனிகள், திருக்கண்ணமங்கையாண்டான் முதலிய சிஷ்யவர்க்கங்களோடு கூடி, திவ்ய ப்ரபந்தங்களை இயலும் இசையு மாக்கி, இவ்வுலகத்தார்களுக்கு ஸாதித்தருளினார். அங்ஙனம் இணைக்கப்பட்ட அருளிச்செயல்களில், பின்வந்த எந்த வித்வானாலோ, பூர்விக ராக தாளங்கள் எடுக்கப்பட்டு, நவீன கர்நாடக ராக தாளங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அச்சம்பவம், புராதன அபிமானமுடைய எல்லா ஆஸ்திகர்களாலும் வருந்தத்தக்கது. அவ்விபரீதத்தில் கூட, ஸாமவேத ஸாரமான திருவாய்மொழி மட்டில், புராதன ராக தாளங்களை, காப்பாற்றிக்கொண்டு விட்டது, ஸந்தோஷிக்கத்தக்கது,

முடிவுரையாக, திவ்ய ப்ரபந்த ரஸிகர்களே! அருளிச்செயல்களை போற்றி வளர்க்கும் புனிதர்களே!! கீர்வாணவேத பாராயணத்தோடு த்ராவிட வேத பாராயணம் பண்ணும் சந்தர்ப்பங்களிலன்றி, மற்ற வேளைகளில் திவ்ய ப்ரபந்தங்களை, சிறப்பாக 'திருநெடுந்தாண்டகம்' முதலிய இசையே உருவாயமைந்த இனிய ப்ரபந்தங்களை (ஸௌகர்யமும் ஸாத்யமுமானால், வீணை முதலிய இன்னிசைக் கருவிகளோடு, இணைத்து) மனம் உருகி, உடல் புளகாங்கிதமுற்று, இன்பம் பொங்கிப் பெருகி வழியுமாறு, இன்னிசையோடு ஸேவித்து, ஆழ்வார்களது கடாக்ஷங்களுக்கும், பகவத் க்ருபைக்கும் பாத்ரர்களாகி, இம்மையில் அடையத்தக்கவைகளை இனிதே கைவரப்பெற்று, மறுமையில் நலமந்த மில்லதோர்' பெருநாடாம் திருநாடு அடையக்கடவீர்களாகுக.

ஆரியூர் ஆ. வ. பத்மநாப ராமாநுஜதாஸன்.

186749

புஸ்தக விமர்சம்.

அடைக்கலப்பத்து— ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்தது—பண்டித பூஷணம் பகவத்விஷயம் ஸ்ரீ. உப. வே. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியின் வ்யாக்யானத்துடன்:—

இந்த க்ரந்தம் சென்ற மாஸம் வெளிவந்திருக்கும் நிகமபரிமளம் என்னும் ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதில் நம் ஸ்வாமி தேசிகன், சரணாகதிக்கு அபேக்ஷிதங்களான அதிகாரி, பரிகரங்கள், சரண்யகுண விசேஷங்கள் முதலியவைகளை விஸ்தாரமாக நிரூபிக்கத் திருவுள்ளம்பற்றி ஸகலரும் ஸுலபமாய் அறிந்துகொள்ளும்பொருட்டு தமிழ் பாஷையில் பாட்டுக்களினால் அருளிச்செய்திருக்கிறார். இதற்குப் பதவுரையும் தாத்பர்யமும் ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமியால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஸ்வநிஷ்டை, உக்தி நிஷ்டை, ஆசார்ய நிஷ்டை, பாகவத நிஷ்டை என்கிற ப்ரபத்தியின் முகபேதங்களை நிரூபிக்கும் "அளவுடையாரடைந்தார்க்கும்... ....வைத்தேனே" என்னும் பாட்டின் வ்யாக்யானாவஸரத்தில் "மாதவத்தோர்க்கும்" என்கிற விசேஷத்தினால் ஆசார்ய நிஷ்டையே ச்ரேஷ்டம் என்று ஸ்பஷ்டமாக நிரூபித்து, சிலர் ஆசார்ய நிஷ்டை என்பது ஜ்ஞான சக்திகளை உடைய சிஷ்யாதிகள் திறத்தில் அநுஷ்டிப்பதற்கு ப்ரமாணம் கிடையாதென்றும், உக்திநிஷ்டைக்கு வேண்டிய ஸமுதாய ஜ்ஞானம் கூட இல்லாதவர்கள் மாத்திரம்தான் ஆசார்ய நிஷ்டையில் அதிகாரிகள் என்றும், இப்படிப் பலபடிகளில் க்ரந்தமுகமாகவும், உபதேச ரூபமாகவும் ப்ரசாரணம் செய்திருப்பதினால், இது விஷயம் நிச்சயமான ஜ்ஞானம் ஏற்படவேண்டியது அவச்யமாகையாலே, இதைப்பற்றி ஸ்ரீ தேசிகனுடைய மற்ற க்ரந்தங்களை நன்றாய் ஆராய்ந்து ஆசார்ய நிஷ்டையே நிபுண க்ருத்யமென்று ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளமென்று, நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஆசார்ய நிஷ்டைக்கு அதிகாரிகள் முதலியவர்களை ப்ரமாணங்களைக்கொண்டு நிரூபித்துவிட்டுப் பிறகு நவீன க்ரந்தங்களில் இதற்கு விரோதமாகச் சொல்லப்படும் ஆக்ஷேபங்கள் பரிஹரிக்கப்பட்டிருக்கின்றன. இத்தால் ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமி செய்திருக்கும் உபகாரம் எவ்வளவு என்று சொல்லமுடியாது.

ப்ரபந்தஸாரம், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்தது, பண்டிதபூஷணம் பகவத்விஷயம் சேட்லூர் ஸ்ரீ. உப. வே. நரஸிம்ஹமாசார்யர் ஸ்வாமி வ்யாக்யானத்துடன்:—

இந்த க்ரந்தம் சென்ற மாஸம் வெளிவந்த நிகமபரிமளம் என்னும் ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. நம் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், பகவான் நித்யஸூரிகளை இந்த பூலோகத்தில் அவதரிப்பித்து, அவர்களிடம் அநுப்ரவேசித்து, லோகோஜ்ஜீவனார்த்தமாக திவ்ய ப்ரபந்தங்களை ப்ரவர்த்திப்பித்த உபகாராதிசயத்தை ஸகல ஜனங்களும் எப்பொழுதும் அநுஸந்திக்கவேண்டு மென்பது சாஸ்த்ரங்களில் சொல்லி இருப்பதால், அப்படியே தனக்கு பின்புள்ளார் எல்லோரும் அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கவேண்டுமென்கிற திருவுள்ளத்தாலே அப்படிப்பட்ட ஆழ்வார்கள் திருவவதாரம் செய்தருளினமாதம், நக்ஷத்ரம், திவ்ய க்ஷேத்ரம், அவர்கள் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தத்தின் திருநாமங்கள், இவைகள் எல்லாவற்றையும் ஸங்க்ரஹமாக தமிழ் பாஷையில் பாட்டுக்களாக இந்த க்ரந்தத்தில் அருளிச்செய்திருக்கிறார். இந்தப் பாட்டுக்களுக்கு பதவுரையும் அதிக விஸ்தாரமில்லாமலும் ஸங்க்ரஹமில்லாமலும் வேண்டிய அளவு எளிதான தாத்பர்யமும் ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமியால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிகமபரிமளம் ஸஞ்சிகை மவுண்டுரோட்டு, ஸ்ரீசடகோபநிலயம் ஆபீஸில் ப்ரசுரம் செய்யப்பட்டு வருகிறது.

அடற்புள்ளரசிலு மந்தணர்மாட்டிலு மின்னமுதக்
கடற்பள்ளிதன்னிலுங் காவிரியுள்ள முகந்தபிரான்
இடைப்பிள்ளையாகி யுரைத்ததுரைக்கும்யதிவரனார்
மடைப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே. 1

அநுபவிக்கிறது, ஊதி - என்று, ஸூ - இந்த க்ரந்தத்தில் நிரூபிக்கப்படுகிற, வவபூணாம் - பர்வங்களினுடைய (படிகளினுடைய), கூ88 - வரிசை (அறியத்தக்கது).

எல்லா மதங்களிலும் மோக்ஷமும், அதற்கு வழிகளும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன, அதுவுமன்றி ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸித்தாந்தத்திலேயே சில வ்யத்யாஸங்களும் ஏற்பட்டிருக்கின்றன, அப்படியிருக்க இதுதான் பகவானால் விதிக்கப்பட்ட ஸோபானபதவீ என்று நிர்ணயம் செய்வது எப்படி என்னில், அதற்கு ஸமாதானம் அருளிச்செய்கிறார்—'அடற்புள்ளரசிலும்' என்றாரம்பித்து.

[ப - ரை.] அடல் - பராக்ரமத்தை உடைய, புள்ளரசிலும் - பக்ஷி ராஜனாகிய கருடன் இடத்தில் காட்டிலும், அந்தணர் - ப்ராம்மணர்களினுடைய, மாட்டிலும் - தனமாகிய வேதத்தில் காட்டிலும், இன் - போக்யமான, அமுதக்கடல் - அம்ருதம் உண்டான க்ஷீரஸமுத்திரமாகிற, பள்ளிதன்னிலும் - படுக்கையில் காட்டிலும், காவிரியுள்ளம் - திருக்காவிரியின் மத்யப்ரதேசமாகிய ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தை, உகந்த - ப்ரீதி பூர்வகமாக அங்கீகரித்த, பிரான் - உபகாரகனான எம்பெருமான், இடைப்பிள்ளையாகி - கோபகுமாரனாகி ஸ்ரீ க்ருஷ்ணனாயவதரித்து, உரைத்தது - அருளிச்செய்த ஸ்ரீ கீதைக்கு, உரைக்கும் - வ்யாக்யானம் செய்தருளின, யதிவரனார் - ஸ்ரீ பாஷ்யகாரருடைய, மடைப்பள்ளி - மடைப்பள்ளியில், வந்த, மணம் - வாஸனை, மடைப்பள்ளியாச்சான் வழியாக உபதேச பரம்பரையில் வந்த ஸம்ப்ரதாயார்த்தம் என்றபடி, எங்கள், வார்த்தையுள் - வார்த்தைக்குள், மன்னியதே - ஸ்திரமாக இருக்கிறது. 1

[தா - ம்.] 'அந்தணர் மாட்டிலும்' என்றது 'ப்ராஹ்மணாநாம் ப்ரணவம் வேத:', 'அந்தணர்மாட்டந்திவைத்த மந்திரத்தை' என்றிவை முதலியவைகளைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்தபடி. இங்கு வேதத்தைப்பொதுவாக அருளிச் செய்திருந்தபோதிலும் அதில் ஸாரமான உபநிஷத்பாகமே உபாதேயமாகக்கடவது. வைஷ்ணவர்களின் ஸமீபத்திலும் என்றும் அர்த்தமாகவுமாம். அப்பொழுது 'வஸந்தி வைஷ்ணவா யத்ர நித்யம் ஸந்நிஹிதோ ஹரி:' இத்யாதிகள் விவக்ஷிதங்கள். 'இன்னமுத' இத்யாதி - 'தவ ப்ரியம் யாமுநேய ஜநார்த்தந:' என்கிறபடியே எம்பெருமானுக்கு மிகவும் ப்ரீதி விஷயமான வாஸஸ்தானம் க்ஷீராப்தி என்றல்லவோ நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்றபடி.

அன்றிக்கே 'இன்னமுது' என்பதினால் ஸாதாரணமான அம்ருதத்தை வ்யாவர்த்திப்பித்து அமுதில் பிறந்தபெண்ணமுதான பெரிய பிராட்டியார் ஆவிர்பவித்த கடல் என்னவுமாம். 'காவிரியுள்ளம்' என்றது இவைகள் எல்லாவற்றில் காட்டிலும் திருக்காவிரியின் மத்யத்தில் இருக்கும் ஸ்ரீரங்கத்தைத் தனக்கு வாஸஸ்தானமாக ப்ரீதி பூர்வகமாக அங்கீகரித்தவன் என்றபடி. அதாவது 'அடல்' என்கிற விசேஷணத்தினால் பராக்ரமம் அவஶ்யம் வேண்டியதான யுத்த ஸமயங்களிலும், அவஸரமாகச் செல்லவேண்டிய கஜேந்திர ரக்ஷணாதிகள் பண்ணும் ஸமயத்திலுமே 'புள்ளரசில்' வாஸம் செய்வது என்பது த்யோதிதம். அந்தணர் மாட்டிலும் ஒருவர்க்கும் ப்ரகாசமாகத் தோன்றாமல் மறைந்து வஸிப்பது. இன்னமுதக்கடல் பள்ளி தன்னிலும் அகிஞ்சனர்களான நம் போலியர்களுக்கு அபிகந்தவ்யதை இல்லாமல் இருப்பது. ஆகையினால் இந்த ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் வஸிக்கும் பொழுதே ஸர்வருக்கும் அபிகந்தவ்யனாயும் ப்ரகாசமாய்த் தோன்றுமவனாயும் நித்யவாஸம் பண்ணுமவனாயும் இருக்கிறபடியினால் அவைகளைக் காட்டிலும் இங்கு பகவானுக்கு ப்ரீதி விசேஷம் அதிகம் என்பது த்யோதிதம் என்றபடி. 'காவிரியுள்ளும்' என்று பாடாந்தரம். அப்பொழுது கருடன் முதலியவர்களுடன் துல்யமாக ஸ்ரீரங்கத்தை உகந்தருளினவன் என்றர்த்தம். 'இடைப்பிள்ளை' இத்யாதியால் கீதைக்கு அநேகம் வ்யாக்யானங்கள் இருந்தபோதிலும் அந்த வ்யாக்யாதாக்கள் அவரவர்கள் மனதில் தோன்றின அர்த்தங்களைக் கீதையில் ஆரோபித்தார்கள் அத்தனை, ஸ்ரீபாஷ்யகாரர் ஒருவருமே ஸ்ரீ க்ருஷ்ணன் எந்த அர்த்தத்தை அருளிச் செய்தாரோ அதையே தம்முடைய வ்யாக்யானத்தில் வெளியிட்டருளினார் என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. 'மடைப்பள்ளி' இத்யாதி - வேதாந்தோதயனர் என்றும், ப்ரணதார்த்திஹரர் என்றும் ப்ரஸித்த திருநாமங்கள் இருக்கச் செய்தே ஆசார்ய கைங்கர்யத்தையே ஸ்வரூபப்ராப்தமாக நினைத்து யதிராஜமஹாநஸிகர் என்று அத்தையே தமக்குத் திருநாமமாக அங்கீகரித்தமையினால் அவருடைய ஆசார்யபக்தி விசேஷம் த்யோதிதமாயிற்று. இத்தால் 'யஸ்ய தேவே பரா பக்தி: யதா தேவே ததா குரௌ । தஸ்யைதே கதிதா ஹ்யர்த்தா: ப்ரகாஶந்தே மஹாத்மந:॥' என்கிற கடஶ்ருதியின்படியே ஸ்ரீபாஷ்யகாரரால் உபதேசிக்கப்பட்ட ரஹஸ்யார்த்தங்கள் எல்லாம் இவருடைய குருபக்தியின் விசேஷத்தினால் இவருக்கு யதாவத்தாக ப்ரகாசித்துக்கொண்டிருந்தன என்பது விவக்ஷிதம். மடைப்பள்ளியிலிருந்து வருகிற பக்வமான அன்னங்களின் வாஸனை என்றும் ஒரு அர்த்தம் த்வனிக்கிறது. இங்கு மடைப்பள்ளி ஆச்சான் என்று நிர்தேசியாதே கேவலம் மடைப்பள்ளி என்று அருளிச் செய்திருப்பதினால் இவருடைய ஆசார்ய பாரதந்த்ர்யத்தின் பராகாஷ்டை காட்டப்பட்டதாகிறது. இத்தால் ஸ்ரீ பாஷ்யகாரரினாலே ரஹஸ்ய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராக நியமிக்கப்பட்ட

கள்ளமனத்துடன் கண்டுமுயன்ற கடுவினையால்
நள்ளிருளாழியி னற்சுவையைந்தென நாடியதோர்
அள்ளலினாளும் விழுந்தழியா வகை யாரணநூல்
வள்ளல் வழங்கிய வான்படியான வழியிதுவே. 2

கிடாம்பி ஆச்சானுடைய ஸம்ப்ரதாயம் உபதேச பரம்பராகதமாய் அப்புள்ளார் மூலமாய்த் தமக்குக் கிடைத்தபடி அருளிச் செய்யப்பட்டதாகிறது. ஆகையினால் இதுவே ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளத்தில் இருந்த அர்த்தம் என்பதும் ஏற்படுகிறது. ஸ்ரீபாஷ்யகாரரோ ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருவுள்ளத்தை அநுஸரித்தவர். ஆதலால் எம்பெருமானுடைய திருவுள்ளத்தை உள்ளபடியே அறிந்த ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளத்தில் இருந்தவைகளாயும் சிரகாலம் அவருக்கு அந்தரங்க சுச்ரூஷாதிகள் செய்ததினால் அவரால் அநுக்ரஹிக்கப்பட்ட ஆச்சான்முகமாக வந்தவைகளாயும் இருக்கிற ஸம்ப்ரதாயத்தில் ஏற்பட்ட அர்த்தவிசேஷங்களை ப்ரதிபாதிக்கிற இந்த க்ரந்தத்தில் நிரூபிக்கப்படுகிற ஸோபான மார்க்கமே 'ஸ்ரீ உதா விஹிதா' என்னத் தட்டில்லை என்றதாயிற்று. ஆகையால் ஆச்சான் ஸம்ப்ரதாயத்தில் அந்வயமில்லாதவர்களுடைய ரஹஸ்யார்த்தங்கள் ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளத்திற்கு அநுகுணமானவைகளல்ல என்பதும் த்யோதிதம். 'மன்னியதே' என்றது வாதிகளாலும் கலக்க வொண்ணாதபடி ஸ்திரமாக இருக்கிறது என்றபடி. இத்தால் ஆசார்ய ஸ்ம்ருதிரூபமான மங்களமும் செய்தருளப்பட்டதாயிற்று.

இப்படிக் கீழ் நிரூபித்த மார்க்கம் கேவலம் ஸம்ப்ரதாயாகதமாய் ஏற்பட்ட அர்த்தத்தினால் நிஶ்சயம் செய்யப்பட்டது மாத்திரமல்ல, இதுவே வேதாந்த சாஸ்திரங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும் மார்க்கம் என்றருளிச்செய்கிறார் - 'கள்ள' என்றாரம்பித்து.

[ப - ரை.] கள்ள - சௌர்யத்தைச் செய்கிற, மனத்துடன் - மனதோடு, கண்டு - வஸ்துக்களைப் பார்த்து அறிந்து, முயன்ற - அதினால் செய்யப்பட்ட, கடு-க்ரூரமான, வினையால் - கர்மத்தினால், நள்இருள் - காடாந்தகாரம் நிறைந்த, ஆழியில் - சுழியில், நல்-நல்ல, சுவை - ஸாரம், அதாவது அநுபவிக்கக்கூடிய வஸ்து, ஐந்து - இவை ஐந்தும், என-என்றெண்ணி, நாடியது - தேடப்பட்ட, ஓர்-அத்விதீயமான, அள்ளலில் - குழைந்த சேற்றில், விழுந்து அழியாவகை - நாம் நசித்துப் போகாத விதமாக, வள்ளல் - மிகவும் உதாரமான, ஆரணநூல்-வேதாந்த சாஸ்திரத்தினால், வழங்கிய - கொடுக்கப்பட்டதான, வேதாந்த சாஸ்திரங்களில் ப்ரதிபாதிதமான என்றபடி, வான் - பரமபதத்திற்கு, படியான,வழி - மார்க்கம், இதுவே-இந்த க்ரந்தத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிற விவேகாதிகளே. 2

[தா-ம்.] 'கள்ளம்' என்றது அபஹாரம், அதாவது 'இவ்வபஹாரம் விபூதியையும் விபூதிமானையும் பற்ற இரண்டு வகையாயிருக்கும், அதில் விபூதிமானை

அபஹரிக்கையாவது ஶரீரியான ஸர்வேஶ்வரனை இல்லை என்னுதல், வேறொருத்தனை ஈஶ்வரனாகக் கட்டி ஸர்வேஶ்வரனை விபூதிகோடியில் வைத்தல் செய்கை. விபூதியை அபஹரிக்கையாவது விபூதியை ஒரு முகத்தாலே இல்லையென்னுதல், உண்டாக்கி ஈஶ்வரனோடு ஸம்பந்தமறுத்து ஸ்வதந்த்ரமென்னுதல், பாரதந்த்ரமாக்கித் தன்னோடு பிறரோடு பிணைப்புதல் செய்கை' என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் அருளிச் செய்யப்பட்ட அபஹாரங்கள். 'கண்டு முயன்ற' என்பதினால் அஹங்கார மமகார நாஸ்திக்ய புத்தி முதலியவற்றை அடைந்து அத்தால் க்ருத்யாக்ருத்ய விவேக ஶூந்யர்களாய்ச் செய்யும் பாபங்கள் என்றபடி. பொய்நின்ற ஜ்ஞானம் உண்டாயிற்றாகில் அதன் மேல்படியான பொல்லா வொழுக்கமிறே ஏற்படும். இங்கு 'கள்ள' இத்யாதியால் 'பொய்நின்ற ஞானமும்' என்பதும், 'முயன்ற கடுவினையால்' என்பதினால் 'பொல்லா ஒழுக்கும்' என்பதும் விவரிக்கப்பட்டதாயிற்று. 'நள்ளிருள் ஆழி' என்றது அஜ்ஞானமாகிற இருட்டை உண்டாக்கக் கூடிய கர்ப்ப ஜன்ம ஜராமரணாதி சக்கரம் என்றபடி. 'விஷ்ணோர் மாயா பகவதீ' என்று சொல்லப்பட்டதிறே. 'நல்சுவையைந்து' என்றது இவனுடைய புத்தியினால் நல்ல ஸுகம் என்று எண்ணப்படுகிற ஶப்தஸ்பர்ஶாதி விஷயங்கள் என்றபடி. விஷய ப்ராவண்யமாவது ஐந்து தலை நாகம் படம் விரித்தாடிக்கொண்டிருக்கையில் அள்ளிக்கொள்ளப் புகுகிறது அறியாமே அதன் கீழே நிழலுக்கு ஒதுங்கி வர்த்திக்கை என்றார்களிறே அபியுக்தர்களும். ஆதலால் இவன் ஸுகமென்று ப்ரமித்து ஆத்மவிநாஶ பர்யந்தமான கேட்டை விளைவித்துக் கொள்ளுகிறான் என்று தாத்பர்யம். 'அள்ளல்' என்பதினால் சேற்றைப்போல் இந்த விஷயங்கள் தங்களிடத்தில் ஸம்பந்தப்பட்ட இந்திரியங்களைத் தங்களிடத்தில் இருந்து மீட்க ஒண்ணாமல் அகப்படுத்திக்கொள்ளும் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'புலன் படிந்துண்ணும் போகம்' என்றும், 'கண்டு கேட்டுற்று மோந்து உண்டுழலும் ஐங்கருவி கண்டவின்பம்' என்றும் அருளிச் செய்யப்பட்டதிறே. 'நாளும்' என்பதினால் எப்பொழுதும் இந்தச் சேற்றிலேயே நாட்செல்ல நாட்செல்ல அழுந்திக்கிடக்கும் என்பதேற்படுகிறது. 'விழுந்தழியாவகை' என்பதினால் 'ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:' என்கிறபடியே விஷயங்களில் ஸங்கமுண்டாகில் 'புத்தி நாஶாத் ப்ரணஶ்யதி' என்கிறபடியே அது விநாஶபர்யந்தமாகும் என்பது த்யோதிதம். 'வள்ளல்' என்றது 'மாதா பித்ரு ஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம் ஶாஸ்த்ரம்' என்கிற ந்யாயத்தினால் அநேகம் தாய்தந்தையர்களைக் காட்டிலும் வாத்ஸல்யமுடையதாகையினால் நம்முடைய ஹிதத்தைத் தெரிவிக்கக்கூடிய ஔதார்யத்தை உடையது வேதாந்த ஶாஸ்திரம் என்றபடி. அன்றிக்கே 'ஆரணநூல் வள்ளல்' என்றந்வயிக்கவுமாம். அதாவது வேதாந்த ஶாஸ்திரத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிற பரமோதாரனான எம்பெருமான் என்றபடி. 'வழியிதுவே' என்றது 'லோகநாத லோகாநாம் ஸ்ருதிப்ரபவம் ச ... ஜுஷ்டம் ... ப்ருத²க்

அஶேஷ சிதசித்வஸ்து ஶேஷியான ஶ்ரிய:பதிக்கு அநந்யார்ஹ நிருபாதிக ஶேஷபூதராய் அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்து அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனைத் தினைத்தனையும்

மத்வா' (ஜீவேஶ்வர தத்வங்களைத் தனித்தனியே அறிந்து அதனால் ஈஶ்வரனுடைய க்ருபைக்குப் பாத்திரனாகி மோக்ஷத்தை அடைகிறான்)' என்றும், 'ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ அநீஶயா ஶோசதி முஹ்யமாந: ஜுஷ்டம் யதா பஶ்யத்யந்யமீஶமஸ்ய மஹிமாநமிதி வீதஶோக:' (ஒரே ஶரீரமாகிய வ்ருக்ஷத்தில் அழுந்திக் கிடக்கிற ஜீவாத்மா ஶக்தியில்லாமையினால் மோஹத்தை அடைந்து துக்கப்படுகிறான், தன்னை விட வேறுபட்டவனாய்த் தன்னிடத்தில் ப்ரீதியையுடைய ஸர்வேஶ்வரனையும் அவனுடைய மஹிமையையும் எப்பொழுது அறிகிறானோ அப்பொழுது துக்கமில்லாதவனாகிறான்) என்றும் ஶ்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கிற படியினால் வேதாந்த ஶாஸ்திரங்களிலும் விவேகம், நிர்வேதம், வைராக்யம், பகவத் ப்ரஸாதம் இவை முதலியவைகளே மோக்ஷ மார்க்கங்களாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றன என்றபடி. 2

இப்படி ஸத்ஸம்ப்ரதாய ஸித்தமாயும், வேதாந்த ஶாஸ்திரத்தில் ப்ரதிபாத்யமாயும் இருக்கிற பரமபத ஸோபான க்ரமத்தை விஸ்தாரமாக அருளிச் செய்ய உபக்ரமித்து அதில் முதலாவதான விவேகம் என்னும் பர்வத்தை நிரூபித்தருளுகிறார்—'அஶேஷ' என்றாரம்பித்து. அதில் 'எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவான ஆகாரத்தையும், ஸம்ஸாரியான தனக்கு இப்பொழுது இருக்கும் ஆகாரத்தையும் தனித்தறிய வேண்டும்' என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் அர்த்த பஞ்சகாதிகாரத்தில் அருளிச்செய்தபடியே முதலில் எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவான ஆகாரத்தை அருளிச் செய்கிறார்—'அஶேஷ' என்றாரம்பித்து 'க்ஷேத்ரஜ்ஞர்' என்னுமளவாக. அநந்யார்ஹ நிருபாதிக ஶேஷபூதராய் - வேறொருவருக்கு இப்படி ஶேஷபூதராயிருப்பதற்கு யோக்யதையில்லாமல் ஒரு காரணமுமில்லாமல் ஸ்வபாவத்திலேயே ஶேஷபூதராய். இத்தால் சிலருக்குச் சிலரைப்பற்ற ஶேஷத்வம் இருந்தபோதிலும் அது கர்மக்ருதமாகையினால் நிருபாதிகமல்ல என்பது த்யோதிதமாயிற்று. பாகவத ஶேஷத்வமும் அவர்களுடைய பாகவதத்வமடியாக வந்ததாலே நிருபாதிகமல்ல என்பதும் விவக்ஷிதம். அந்தமில் - முடிவில்லாத (அளவில்லாத), பேர் - அதிகமான, இன்பத்து - ஆநந்தத்தை அநுபவித்துக் கொண்டிருக்கிற, அடியரோடு - தாஸபூதர்களான நித்யமுக்தர்களோடு. அனைத்துலகுமுடைய - எல்லா லோகங்களையும் தனக்கு ஶேஷபூதமாக உடைய, அரவிந்த லோசனனை - தாமரைப் புஷ்பங்கள் போன்ற திருக்கண்களையுடைய ஸர்வேஶ்வரனை, தினைத்தனையும் - தினையளவும், அதாவது

விடாதே அநுபவிக்க ப்ராப்தரான க்ஷேத்ரஜ்ஞர் அநாத்யவித்யா கர்மாதி ப்ரவாஹத்திலொழுகிக் கரையேற விரகற்று அலமருகின்ற படியைக் கண்டருளின பரமகாருணிகனான பரமசேஷி தானே ஜ்ஞாநக்கை கொடுத்து இவர்களை யெடுக்கவிடம் பார்த்து, அஜ்ஞாத யாத்ருச்சிகாநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமாந்யபுத்திக்ருத ஸுக்ருத

கொஞ்சமேனும், தினை என்பது ஒரு மிகவும் சிறியதான தான்யம், பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூத்யாதிகளில் ஒன்றையும் கொஞ்சமேனும் விடாமல் என்றபடி. ப்ராப்தரான - ஸ்வரூபத்தில் யோக்யதை உடையவரான, க்ஷேத்ரஜ்ஞர்- ஜீவாத்மாக்கள். இதற்குமேல் ஸம்ஸாரமண்டலத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு அஸாதாரணமான ஆகாரத்தை அருளிச்செய்கிறார்—'அநாதி' என்றாரம்பித்து. அநாதி - ஆதியில்லாத, அவித்யா கர்மாதி ப்ரவாஹத்தில் - அவித்யை, கர்மம், வாஸனை, ருசி, ப்ரக்ருதி ஸம்பந்தங்களாகிற பரம்பரையில். 'கர்மாவித்யாதி வசே' என்கிறபடியே இவைகள் ஒரு சக்ரம்போல் சுழன்று மாறிமாறி அநாதியாக ப்ரவாஹம்போல் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன என்றதாயிற்று. ஒழுகி - அதிலேயேபோய்க் கொண்டு. விரகற்று - உபாயமில்லாமல், அலமருகின்ற-ப்ரமப்படுகிற, படியை - ப்ரகாரங்களை. இப்படி ஸம்ஸாரத்தில் முழுகிக்கரையேற வழிதெரியாமல் திகைத்துக்கொண்டு நிற்கும் இவனுக்கு இதிலிருந்து கரையேறுவதற்கு வழி ஏற்படும் ப்ரகாரத்தை நிரூபித்தருளுகிறார்—'பரமகாருணிகனான' என்றாரம்பித்து. பரமசேஷி-தனக்கு வேறொரு சேஷி இல்லாமல் எல்லாவற்றிற்கும் தானே சேஷியாயிருப்பவன். இது மேலே 'உபதேசிக்க' என்பதோடு அந்வயிக்கிறது. 'தானே' என்றது வேறொரு காரணம் ஒன்றுமில்லாமல் என்றபடி. ஜ்ஞாநக்கை-ஜ்ஞானமாகிறகையை.நதியின்ப்ரவாஹத்தின்வழியே போய்க்கொண்டிருப்பவனுக்குப் பிடித்துக்கொண்டு கரையேறுவதற்கு ஸாதனமாகக் கையை நீட்டுவதைப்போல் இங்கு பகவானும் ஜ்ஞானத்தை உண்டு பண்ணி அது வழியாக இவனை ஸம்ஸாரத்தில் இருந்தும் கரையேற்றுகிறுனைகையினுல் இங்கு ஜ்ஞானத்தைக் கையாக நிரூபித்தருளினபடி. இவர்களை எடுக்க - இந்த ப்ரவாஹத்தின் மத்யத்திலிருந்து கரையேற்றிவிட, இடம் பார்த்து - அவஸரத்தை எதிர்பார்த்து. 'தஸ்ய ஸ்வாவகாஶ:' இத்யாதிகள் இங்கு விவக்ஷிதங்கள். 'அஜ்ஞாத' இத்யாதி பதங்கள் மேல் 'ஸுக்ருத' என்னும் பதத்துடன் அந்வயிக்கின்றன. 'அஜ்ஞாத ஸுக்ருத'மாவது தானே இது ஒரு ஸுக்ருதம் என்றறியாமல் நேரும் ஸுக்ருதம், அதாவது வேறு கார்யார்த்தமாகப் போய்க்கொண்டிருக்கும்பொழுது பகவத் ஸந்நிதி முதலியவைகளை ப்ரதக்ஷிணமாகப் போகிறோம் என்றறியாமலே ப்ரதக்ஷிணம் செய்துகொண்டு போவது என்றபடி. 'யாத்ருச்சிகஸுக்ருத'மாவது தான்

விசேஷங்களை வ்யாஜமாகக்கொண்டு விசேஷகடாக்ஷம் பண்ணி அத்வேஷாபிமுக்ய ஸாத்விகஸம்பாஷணாதிகளை யுண்டாக்கி, ஸாதாரண நித்ய ஸம்பந்த ஸஹகாரியான ஆசார்யஸம்பந்தத்தை

எதிர்பாராமல் நேர்ந்த ஸுக்ருதம், அதாவது பகவான் முதலியவர்களை ஸேவிக்கவேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல் இருக்கும்பொழுது பகவான், பாகவதர்கள் முதலியவர்கள் தாங்களே எழுந்தருளி ஸேவை ஸாதிக்க அப்பொழுது அவர்களை ஸேவிப்பதால் ஏற்படும் ஸுக்ருதம் என்றபடி. 'ஆநுஷங்கிகஸுக்ருத'மாவது வேறொரு கார்யத்தை உத்தேசித்துப் போகும்பொழுது நடுவில் நேரும் பகவத்ஸேவை முதலிய ஸுக்ருதம். 'ப்ராஸங்கிகஸுக்ருத'மாவது வேறொரு கார்யத்தைச்செய்யும்பொழுது இதுவும்கூட இருக்கட்டும் என்று செய்வது. 'ஸாமாந்யபுத்திக்ருத ஸுக்ருதவிசேஷ'மாவது ஸாமாந்ய தர்மமென்று நினைத்துச்செய்யச் செய்தே அது விசேஷஸுக்ருதமாக ஏற்படுவது, அதாவது ஸாதாரணமாகப் பிச்சையிடுகிறோம் என்றெண்ணிப் பிச்சை கொடுக்கும்பொழுது அது பாகவதர்கள்விஷயத்திலேயாய் நேருமவை என்றபடி. 'வ்யாஜமாகக்கொண்டு' என்பதினுல் அவனுடைய ஸஹஜஸௌஹார்த்தமே முக்ய காரணம், இந்த வ்யாபாரங்கள் பக்ஷபாதாதி தோஷங்கள் உண்டாகாமைக்காகக் கேவலம் வ்யாஜமாக ஏற்பட்டவை என்பதும், இந்த ஸுக்ருதங்களின் விசேஷங்களினுல் ரக்ஷிக்கவில்லை, பகவான் தன்னுடைய ஸஹஜகாருண்யத்தினுலேயே ரக்ஷிக்கிறுன் என்பதும் தெரிவிக்கப்பட்டதாகிறது. விசேஷகடாக்ஷம் பண்ணி - மோக்ஷ பர்யந்தமான பரிபாகங்களை உண்டாக்குவதற்குக் காரணமான விசேஷ கடாக்ஷத்தைப் பண்ணி. எற்கனவே இவர்களைக் கரையேறவிட எண்ணியிருந்தவனுக்குப் பூர்வோக்தங்களான அஜ்ஞாத யாத்ருச்சிகாதி ஸுக்ருதங்கள் ஒரு அவஸர ப்ரதானம் பண்ணிற்று என்றபடி. அத்வேஷ - பகவானிடத்தில் த்வேஷமில்லாமை. இதற்கு முன் பகவான் என்னும் பெயரை வேறு யாராவது சொல்லும்பொழுதும் கூட த்வேஷம் உண்டானவனுக்கு அது இல்லாமல் போவது என்றபடி. ஆபிமுக்யம் - த்வேஷமும் ப்ரீதியுமில்லாமல் உதாஸீநனை யிருக்கும் அவஸ்தை தாண்டி பகவானிடத்தில் கொஞ்சம் ப்ரீதி உண்டாவது. ஸாத்விகஸம்பாஷணம் - ஸாதுஜனங்களான பாகவதோத்தமர்களுடன் ஸம்பாஷிப்பது. ஸாதாரண - ஸர்வ ஜீவாத்மாக்களுக்கும் பொதுவான, நித்ய - நித்யமாயிருக்கிற, ஸம்பந்த - ஜீவாத்மாவிற்குத் தன்னுேடுண்டான சேஷசேஷிபாவ ஸம்பந்தத்திற்கு, ஸஹகாரியான - ஒத்தாசையான, அதாவது ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் உண்டான சேஷசேஷிபாவ ஸம்பந்தம் எப்பொழுதும் எல்லா ஆத்மாக்களுக்கும் இருந்தபோதிலும் இவ்வளவு காலமாய் அது

அபிஸந்தி பண்ணி, 'விஶேஷண விஶேஷ்ய ஸ்வபாவ விஷயமாகத் திருந்தக் கண்டுரைக்க வல்ல தெளிவுற்ற சிந்தையனாய் குலிங்க ஶகுநிவ்ருத்தாந்த வைதேஶிகனான தேஶிகன் திருவடிகளிலே சேர்த்து, அவன் ஹ்ருதயத்திலும் வாக்கிலும் கோயில் கொண்டு பிரமகுருவாகி நின்று தீதில் நன்னெறி காட்டவொருப்பட்டு, ஆத்மோஜ்ஜீவநாபேக்ஷி

ப்ரயோஜன முடையதாக ஆகவில்லை, எல்லா ஆத்மாக்களுக்கும் ப்ரயோஜனத்தைக் கொடுக்கவுமில்லை, ஏனெனில் அதற்கு ஒத்தாசையான ஆசார்ய ஸம்பந்தம் இல்லாமையாலே, அது உடையவனுக்கே அந்த ஸம்பந்தம் கார்யகரமாகிறது என்றபடி. அபிஸந்தி பண்ணி - இவனுக்கு உண்டாக்க வேண்டும் என்கிற ஸங்கல்பத்தைச்செய்து. இதற்குமேல் ஆசார்ய ஸம்பந்தத்தை நிரூபித்தருளுகிறார் — 'விஶேஷண' என்றாரம்பித்து. விஶேஷணங்களாவன பகவானுக்கு ஶரீரங்களாகிய சேதநாசேதன வஸ்துக்கள், விஶேஷ்யமாவது இவைகளுக்கு ஆதாரபூதமான எம்பெருமான், உபய - இவை இரண்டின், 'ஸ்வபாவ' என்றது அவைகளின் ஸ்வரூபத்திற்கும் உபலக்ஷணம். 'தத்த்வேந யஶ்சிதசிதீஶ்வர தத்ஸ்வபாவ' என்று தத்வங்களின் ஸ்வரூபமும் ஸ்வபாவமும் ஜ்ஞாதவ்யங்களாக ஸங்க்ரஹிக்கப்பட்டதிறே. திருந்த - நன்றாக, நிஶ்சயரூபமாக என்றபடி. உரைக்கவல்ல-உபதேசிக்கக் கூடிய. தெளிவுற்ற - நைர்மல்யத்தை உடைய, அதாவது வைஶத்யத்தை உடைய என்றபடி. சிந்தையனாய்-புத்தியை உடையவனாய், அன்றிக்கே தத்வங்களைப் பற்றிய அநுஸந்தானத்தை உடையவனாய், 'பஶ்யந்நாப்ய யதா பாக்ஷி ஸத்த்வப்ரதிஷ்டிதா। தத்ரூபமேவாஸ்ய ஸத்த்வம் ஸம்ப்ரத்யக்ஷி விஶேஷ:॥' என்றும், 'உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்த்வதர்ஶிந:' என்றும் சொல்லுகிறபடியே ப்ரத்யக்ஷமாக அறிவதைப்போலே விஶதமாக அறியக்கூடிய அநுஸந்தான விசேஷத்தை உடையவனாய் என்றபடி. 'குலிங்க' இத்யாதி — குலிங்கபக்ஷியின் நடவடிக்கைக்கு வெகு தூரத்தில் இருப்பவனான. குலிங்க ஶகுனி என்கிற பக்ஷி 'மா ஸாஹஸம் குரு' என்று ஶப்தித்துக் கொண்டு இருக்கச் செய்தே சிங்கம் வாய்திறந்து கொட்டாவி விடும்பொழுது அதின் பல் நடுவில் இருக்கும் மாம்ஸத் துண்டங்களை கொத்திக் கொண்டுவந்து புஜிக்கையாகிற ஸாஹஸமான கார்யத்தைச் செய்கிறது, அப்படித் தன்னுடைய உபதேசத்திற்கு விரோதமான ஆசாரம் இல்லாதவனான என்றபடி. தேஶிகன் - ஆசார்யனுடைய. கோயில்கொண்டு - ஸாந்நித்யம் பண்ணி, பிரமகுருவாகி - ப்ரும்மவித்யையை உபதேசிக்கிற ஆசார்யனாகி, தீது - தோஷம், இல் - இல்லாத, நன்னெறி - நல்ல மார்க்கத்தை, காட்ட - ப்ரகாசம் செய்ய, ஒருப்

ந து சந்தநாதே: ம்ருதஶ்ச ப்ராஶஸ்த்யஸாம்யப்ரதிபாதநபரம் இதி ஸ்வப்ரகரண ஸமாந ப்ரகரணஸ்த வாக்யாச்ச। அதோऽத்ர ம்ருத்ஸுலபத்வாபாவே ப்ராஹ்மணஸ்ய சந்தந பஞ்சகவ்யயோரநுமதி மாத்ரம்। 'ஶ்ரீகாமோ தாரயேத் பில்வம் ஶ்ரீபத்ரம் சந்தநம் ததா வா। ராஜா ப்ராணி ஸுகந்தாதி சந்தநம் சாகரும் ததா। வைஶ்யஶூத்ரயோ: பஸ்ம பஞ்சகவ்யம் விஶோऽபி வா। ஶூத்ரேணைவ ஸதா தார்யம் பஸ்ம தோயக்ருதேந ச॥" இத்யாதி। ததா — "ம்ருதைவ வைஷ்ணவ: கார்யம் ஊர்த்வபுண்ட்ரம் சந்தநேந வா। ந பஸ்மநா கதாசித்து த்ரவ்யேணாந்யதமேந வா॥ சந்தநம் ப்ராணிகந்தம் ச ஶ்ரீபத்ரம் அகரும் ததா। ராஜஸ த்ரவ்யமேவைதத் வதந்தி ப்ரஹ்மவாதிந:॥ பஞ்சகவ்யம் ச பில்வம் ச ஶ்ரீபத்ரம் பஸ்மதோயகம்। தாமஸ த்ரவ்யமேவைதத் ஸாத்த்விகீ பஞ்சம்ருத்திகா॥" இதி। ததா கிஞ்சிதநந்தரம் சோக்தம் "ஸௌந்தர்யமைஶ்வர்யம் விஜ்ஞாநம் சந்தநம் ஸம்ப்ரயச்சதி। ஆயுஷ்யமகரு

இது ப்ராம்மணனுக்குப் பஸ்மம் முதலியது கூடாது என்று சொல்லுவதில் தாத்பர்யத்தை உடையதேயன்றி, சந்தனம் முதலியவைகள் மண்ணைப் போல் மிகவும் விசேஷமானவைகள் என்பதைச் சொல்லுகிறதல்ல என்பது அந்த ஸந்தர்ப்பத்தினாலும் இதற்கு ஸமமான மற்ற க்ரந்தங்களில் இருக்கும் ஸந்தர்ப்பங்களினாலும் வ்யக்தமாக ஏற்படுகிறது. ஆகையினால் இவ்விடத்தில் பரிசுத்தமான மண் கிடைக்காத பக்ஷத்தில் ப்ராம்மணன் சந்தனம், பஞ்சகவ்யம், இவைகளை எடுத்துக்கொள்ளலாம் என்று அனுமதி மாத்திரம் செய்யப்பட்டிருக்கிறது. 'ஸம்பத்து வேண்டும் என்கிற ஆசை உடையவன் வில்வத்தையாவது அதின் இலையையாவது சந்தனத்தையாவது தரிக்கலாம். ராஜா ப்ராணிகளினுடையதான வாஸனை உடைய வஸ்துக்களையாவது சந்தனத்தையாவது அகில் கட்டையையாவது தரிக்கவேண்டும். பஸ்மம் வைஶ்யர்களுக்கும் ஶூத்திரர்களுக்குமே ஏற்படுத்தப்பட்டது. அன்றிக்கே வைஶ்யனுக்குப் பஞ்சகவ்யம் ஏற்படுத்தப்பட்டது. ஶூத்திரனாலேயே எப்பொழுதும் ஜலத்துடன் சேர்ந்த பஸ்மம் தரிக்கத்தக்கது' என்றிவை முதலியது சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே 'வைஷ்ணவன் மண்ணினாலேயே ஊர்த்வபுண்ட்ரம் தரிக்கவேண்டும், அது இல்லாத பக்ஷத்தில் சந்தனத்தினாலாவது தரிக்கவேண்டும், ஒருபொழுதும் பஸ்மத்தினாலாவது வேறு ஏதாவது வஸ்துவினாலாவது தரிக்கக்கூடாது. சந்தனம், ப்ராணிகளினுடைய வாஸனையுள்ள வஸ்து, ஸ்ரீபத்ரம், அகில்கட்டை, இவைகளை வேதாத்யயனம் செய்தவர்கள் ரஜோகுணம் நிறைந்ததாகச் சொல்லுகிறார்கள்; பஞ்சகவ்யம், வில்வம், ஸ்ரீபத்ரம், ஜலத்துடன் சேர்ந்த பஸ்மம் இவைகள் தமோகுணம் நிறைந்த த்ரவ்யங்கள், ஐந்துவிதமான மண் ஸத்வகுணம் நிறைந்தது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியே கொஞ்ச தூரத்திற்குமேல் 'சந்தனம் அழகு, ஐச்வர்யம், ஜ்ஞானம் இவைகளைக் கொடுக்கக்கூடியது என்று சொல்லப்பட்டது. அகில்கட்டை ஆயுஸ்ஸைக் கொடுக்கக்கூடியது. ஸ்ரீபத்ரம் சாந்தியைக் கொ

[illegible]

டுக்கக்கூடியது என்று சொல்லப்பட்டது' என்றாரம்பித்து, 'ஐந்துவிதமான மண்ணே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது, வில்வம் ஸம்பத்தைக் கொடுக்கக்கூடியது, வாஸனையுடைய வஸ்துக்கள் எல்லாம் வச்யத்தை (மனிதர்களை வசப்படுத்தும் சக்தியை)க் கொடுக்கக்கூடியது, மஞ்சள் பரிசுத்தியைக் கொடுக்கக்கூடியது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீபத்ரம் மதங்களின் வ்யத்யாஸத்தினாலும் ப்ரயோகத்தின் வ்யத்யாஸத்தினாலும் ரஜோகுணம் உடையதென்றும், தமோகுணமுடையதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ நாரதீயத்தில், மண் சந்தனம் முதலியவைகளை விகல்பமாகச் சொல்லி இருப்பது அந்தந்த அதிகாரிகளின் வ்யத்யாஸத்தினால் தனித்தனியே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மண் கிடைக்காத பக்ஷத்தில் மற்ற வஸ்துக்களை க்ரஹிக்கலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எப்படி என்னில்:—'முதலில் மண் என்கிற வஸ்து சிறந்தது, அதில் காரணம் சொல்லப்படுகிறது' என்றாரம்பித்து 'உத்ருதாஸி' என்றாரம்பித்து 'ப்ரதிஷ்டிதாம்' என்பதுவரையிலான ச்ருதி வாக்யத்தை எடுத்து 'ஆகையினால் எல்லா வஸ்துக்களிலும் எப்பொழுதும் ம்ருத்திகையே க்ரஹிக்கத்தகுந்தது, அவ்விடத்திலேயே மற்றொரு வாக்யமும் மண் விசேஷம் என்பதைச் சொல்லுகிறது' என்று சொல்லி 'அச்வக்ராந்தே' என்கிற மந்திரத்தை எடுத்து, 'ப்ரத்யக்ஷமாகப் படிக்கப்படுகிற ச்ருதி இப்படிச் சொல்லுகிறதாகையினால் மண்ணே மிகவும் சிறந்தது' என்று சொல்லப்பட்டது. அதற்குமேலும் 'ப்ராம்மணனுக்கு மண்ணே சொல்லப்பட்டது. க்ஷத்திரியனுக்குச் சந்தனமும், வைச்யனுக்கு வில்வவேரும்.

[illegible]

சூத்திரர்களுக்குப் பஸ்மமும் சொல்லப்படுகிறது' என்று வர்ணங்களின் பிரிவை அனுஸரித்து வஸ்துக்களையும் பிரித்துச்சொல்லி, அது கிடைக்காத பக்ஷத்தில் அங்கீகரிக்கத் தகுந்ததான அனுகல்பமாய், பலங்கள் வெவ்வேறாய் இருப்பதைக் காரணமாக உடைய அதிகாரிகளின் பேதத்தின் அபிப்ராயத்தினாலே 'எல்லோருக்கும் அவரவர்களுக்குத் தக்கபடி மண்ணாவது சந்தனமாவது வில்வவேராவது அன்றிக்கே பஸ்மமாவது முன்னோர்களினால் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால் அவைகளுக்குள் ஒன்றை மந்திரத்துடன் குழைத்து மனிதன் ராக்ஷஸர்களைப் போக்கடிப்பதற்காக ஊர்த்வபுண்ட்ரத்தைச் செய்யவேண்டும்' என்று சொல்லப்பட்டது. இப்படியே இன்னும் சில இப்படிப்பட்ட வசனங்களும் மண் கிடைக்காத தசையைப்பற்றிச் சொல்லப்பட்டவைகள் என்று நினைக்கத்தக்கது. அப்படியே நாரதீய ஸம்ஹிதையில் இருபத்திநாலாவது அத்யாயத்தில் 'ஆத்மஜ்ஞானமுடைய எந்த மனிதன் எப்பொழுதும் மண்ணினாலே வெளுத்த நிறமுடைய ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிக்கிறானோ அவனுக்கு எல்லா லோகத்தாராலும் நமஸ்காரம் செய்யப்பட்டவராகிய விஷ்ணு அனுக்ரஹத்தைச் செய்கிறார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ம்ருதிகளிலும் வ்ருத்தவஸிஷ்ட ஸ்ம்ருதியில் 'ஊர்த்வபுண்ட்ரமானது மண்ணினாலேயே செய்யத்தக்கது, யதிகளுக்கு விசேஷமாக அப்படியே செய்யத்தக்கது, ஆயுஸ் உள்ள வரையில் பஸ்மம் சந்தனம் வாஸனை உள்ள வஸ்துக்கள் இவைகளை விட்டுவிடவேண்டும்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் யதிகளுக்கு

ந்யேஷாமபி வைஷ்ணவாநாம் க்ராஹ்யம் । ஏவம் ஸ்ரீபாத்மஸம்ஹிதாயாம் — "ப்ரஶஸ்தே பர்வதாக்ராதௌ ஜாதயா ஶ்வேதம்ருத்ஸ்நயா । உச்சார்ய கேஶவாதீநி நாமாந்யங்கேஷு யதாக்ரமம் ॥" இத்யாதி । தத்ரைவ ஸமாராதந விதிக்ரமே, 'அலங்க்ருதஸ்ஸ்ரக்வீ ஶுக்லாம்பரதரஶ்ஶுசி: । ஶுக்லோத்தரீயவாந் ரம்ய சந்தநாநுலேபந: । சந்தந ஶ்வேதம்ருத்தோயை: க்ருதோர்த்வபுண்ட்ரக: ॥" இதி । பாரமேஶ்வரே குமுதாதீநாம் த்யாநப்ரகாரே தேஷாமூர்த்வபுண்ட்ரதாரணோக்த்யநந்தரமுக்தம் — "ஏவம் ததீயா விப்ராஶ்ச க்ஷத்ரியா வைஶ்யஜாதய: । ம்ருதைவ வா சந்தநேந க்ருதைகோர்த்வபுண்ட்ரகை: । த்வாதஶைக சதுர்பிர்வா ஹ்யலங்க்ருதா: ஸ்யு: ஸதா த்விஜ ॥" இதி । 'ம்ருதைவ வா சந்தநேந' இதி ம்ருதைவ ததபாவே சந்தநேந வேத்ய

ஸமமாகப் பகவானுக்கே உரியவர்களாகையினாலும் மற்றவசனங்களை அனுஸரித்திருப்பதினாலும் மற்ற வைஷ்ணவர்களுக்கும் அங்கீகரிக்கத்தக்கது. இப்படியே ஸ்ரீ பாத்மஸம்ஹிதையில் 'பரிசுத்தமான மலையின் சிகரம் முதலிய இடங்களில் உண்டானதாகிய வெளுத்த நிறமுள்ள மண்ணினால் கேசவன் முதலிய பனிரண்டு திருநாமங்களை உச்சரித்துத் தன்னுடைய அங்கங்களில் க்ரமப்படி (தரிக்கவேண்டும்)' என்றிவை முதலியது சொல்லப்பட்டிருக்கிறது. அதிலேயே பகவானுடைய ஆராதனத்தைச் சொல்ல ஆரம்பித்து ஆராதனம் செய்பவன் அலங்காரம் செய்துகொண்டவனும், புஷ்பங்களைத் தரித்துக்கொண்டவனும் வெளுத்த வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டவனும் பரிசுத்தனும் வெளுத்த உத்தரீயத்தைத் தரித்துக்கொண்டவனும் அழகான சந்தனத்தைப் பூசிக்கொண்டவனும், சந்தனம், வெளுத்த நிறமுடைய மண், ஜலம் இவைகளினால் செய்யப்பட்ட ஊர்த்வபுண்ட்ரத்தை உடையவனும் இருக்கவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாரமேச்வர ஸம்ஹிதையில் குமுதன் முதலியவர்களை த்யானம் செய்யவேண்டிய ப்ரகாரத்தைச் சொல்லும் இடத்தில் அவர்கள் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னதற்குப் பிறகு, 'இப்படியே ஓ! ப்ராம்மணனே! அந்தப் பகவானைச் சேர்ந்தவர்களான ப்ராம்மணர்கள் க்ஷத்திரியர்கள் வைச்யர்கள் இவர்கள் எல்லோரும் மண்ணினாலாவது சந்தனத்தினாலாவது செய்யப்பட்ட பனிரண்டு, நாலு, அல்லது ஒன்றாகிய ஊர்த்வபுண்ட்ரங்களினால் எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டவர்களாய் இருக்கவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'மண்ணினாலாவது சந்தனத்தினாலாவது' என்று சொல்லப்பட்டிருப்பதற்கு மண்ணினாலேயே தரிக்கவேண்டும்,

ர்த: । ஆதித்யபுராணே கௌதமஶாப: — "த்ரிபுண்ட்ரதாரிணோ நித்யம் பஸ்மோத்தூளிததநவ: । பவிஷ்யத த்ரயீபாஹ்யா மித்யாஜ்ஞாநப்ரலாபிந: ॥" இதி । கேசித் பஸ்மஜடோபேதா யதோக்தம் கௌதமேந வை ॥" இதி ச । ஏவம் வாராஹேபி — "கோவத்யாகரணம் தஸ்ய யாவச்ச பஶ்யதி யோகவித் । ருஷீணாம் கபடம் ஸர்வமிதி ஸஞ்சிந்த்ய தத்ர வை । ஶஶாப தாந் ஜடாபஸ்ம மித்யாவ்ரதபராம்ஸ்ததா ॥" இதி । தத்ரைவ க்ஷேத்ரமாஹாத்ம்யாதிகாரே — "குலீநோ ப்ராஹ்மணோ வித்வாந் பஸ்மதாரீ பவேத்யதி । வர்ஜயேத் தாத்ருஶம் தேவி மத்யோச்சிஷ்டகடம் யதா ॥" இதி । மார்க்கண்டேயே — "ஊர்த்வபுண்ட்ரம் ம்ருதா கார்யம் விப்ரேண ப்ரஹ்மவாதிநா । உத்ருதாஸீதி மந்த்ரேண வைஷ்ணவேந விஶேஷத: ॥" இதி ।

பாகவதாஸாதாரணே ஸ்ரீஸாத்வதே — "ஜலநிஷ்பிஷ்டே

அது கிடைக்காத பக்ஷத்தில் சந்தனத்திலாவது தரிக்கவேண்டும் என்றர்த்தம். ஆதித்யபுராணத்தில் கௌதமருடைய சாபம் 'நீங்கள் த்ரிபுண்ட்ரத்தைத் தரித்துக்கொண்டவர்களாய் எப்பொழுதும் பஸ்மத்தை உடம்பெங்கும் தரித்துக்கொண்டவர்களாய் வேதத்திற்கு புறம்பானவர்களாய் பொய்யான ஜ்ஞானத்தைச் சொல்லிக்கொண்டிருப்பவர்களாய் இருக்கவேண்டும்' என்றும், 'சிலர் பஸ்மம் ஜடை, இவைகளை உடையவர்களாய் கௌதமரால் முன் எப்படிச் சொல்லப்பட்டதோ அப்படியே ஆனார்கள்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியே வராஹ புராணத்திலும் 'யோகத்தை அறிந்தவரான அந்த ரிஷி எப்பொழுது பசுவை வதம் செய்ததை இந்தப் பூமியில் பார்த்தாரோ அப்பொழுது இது எல்லாம் ரிஷிகளின் கபடத்தினால் உண்டானது என்று நினைத்து அவர்களை ஜடை, பஸ்மம், பொய்யான வ்ரதங்கள் இவைகளைத் தரித்துக்கொண்டவர்களாக ஆகக்கடவீர்கள் என்று சபித்தார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விடத்திலேயே க்ஷேத்திரங்களின் மஹிமையைச் சொல்லும் இடத்தில் 'நல்லகுலத்தில் பிறந்தவனும் தெரிந்தவனுமாயும் இருக்கிற ப்ராம்மணன் பஸ்மத்தைத் தரித்துக்கொண்டவனாய் இருந்தானேயாகில், ஓ! தேவியே! அவனைக் கள்ளினால் தொடப்பட்ட அசுத்தமான குடத்தைப்போல விட்டுவிடவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மார்க்கண்டேய புராணத்தில் 'ப்ரும்மத்தைச் சொல்லுகிற ப்ராம்மணனால் ஊர்த்வபுண்ட்ரம் மண்ணினாலே 'உத்ருதாஸி' என்கிற மந்திரத்தைச் சொல்லித் தரிக்கத்தக்கது, வைஷ்ணவர்களினால் அவச்யம் தரிக்கத்தக்கது' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பாகவதர்களுக்கு அஸாதாரணமாகிய ஸ்ரீ ஸாத்வத ஸம்ஹிதையில் ஜலத்தினால் குழைக்கப்பட்ட (பஸ்மத்தினால்) மார்பிலும் இரண்டு தோள்களி

[illegible]

லும் நெற்றியிலும் விளக்கின் சுடர்போன்ற ஆகாரங்களை உடைய நான்கு ஊர்த்வபுண்ட்ரங்களைத் தரிக்கவேண்டும்' என்று விதிக்கப்பட்டிருப்பதினுல் பஸ்மமும் வைஷ்ணவர்களினுல் க்ரஹிக்கத்தக்கதுதான் என்னில், இது சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது என்பது மாத்திரத்தினுலா? அன்றிக்கே வைஷ்ணவர்களைக் குறித்து விதிக்கப்பட்டிருப்பதினுலா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல — அதிப்ரஸங்கம் வருகிறபடியினுல் (அதாவது யாருக்காகவாவது விதிக்கப்பட்டிருப்பதை எல்லோரும் அனுஷ்டிக்கும்படிவரவேண்டுமாதலால் என்றபடி,) அந்த வைஷ்ணவர்களைக் குறித்தே பஸ்மம் கூடாது என்று நிஷேதம் அனேகம் இருக்கிறதென்று கீழே காட்டப்பட்டிருப்பதினுல் ஆகையினுலேயே இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல—வைஷ்ணவர்களைக் குறித்து விதிக்கப்பட்டிருக்கிறது என்பது ஏற்படாமையினுலும் 'பகவானை ஆராதிப்பதில் அதிகாரத்தை உடையவன் தான் விஷ்ணுவாக அல்லாதவன் விஷ்ணுவை ஆராதிக்கக்கூடாது' என்றிவை முதலிய வசனங்களினுல் விஷ்ணுவாயே இருப்பவன் அவைஷ்ணவனு என்ன என்னில், பாபம் நீங்குக. யாரால் இப்படிச் சொல்லப்பட்டது? பகவானை ஆராதிப்பவர்களைக் குறித்து விதிக்கப்பட்ட பஸ்மத்தைப்பற்றி வைஷ்ணவர்களைக்குறித்து விதிக்கப்படவில்லை என்று சொல்லுகிற உன்னுலேயே சொல்லப்பட்டது என்னில், அஹோ! அபிப்ராயம் அறியாதவன், அவ்விடத்தில் முன்னமேயே ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்துக்கொண்டவனுய் பகவானை ஆராதனம் செய்து முடித்தவனுக்கு அக்னி கார்யத்தைச் சொன்னபிறகு விதிக்கப்படுகிற இது அந்த அக்னி கார்யத்தைச் சேர்ந்தது என்று நினைக்கத்தக்கது. வைஷ்ணவனுய் இருப்பதை மாத்திரம் காரணமாக உடையதல்ல இந்த விதி.

[illegible]

ஆராதனத்திற்கும் எல்லா இடத்திலும் அங்கமுமல்ல. ஒரு கார்யத்தில் விதிக்கப்பட்டது எல்லா இடத்திலும் அனுஷ்டிக்கத்தக்கதாகாதல்லவா— அதிப்ரஸங்கம் வருகிறபடியினுல். இத்தால் வைகானஸ ஸூத்திரம் முதலிய க்ரந்தங்களில் சொல்லப்பட்டதும் அந்தந்தக் கர்மத்திற்கு மாத்திரம் அங்கம் என்று நிர்ணயிக்கப்பட்டதாகிறது. இப்படியே மற்றக் கல்ப ஸூத்திரங்களிலும் அந்நாத்யத்தில் ஆசை உடையவன் ஸாவதானத்தை உடையவனுய் இருந்து இப்படியே ஹோமம் செய்யவேண்டும், அந்தப் பஸ்மத்தை எப்பொழுதும் தரிக்கவேண்டும். இப்படிச் செய்தானேயாகில் அதிகமாக அந்நாத்யத்தை (ஆஹாரம் முதலியவைகளை) உடையவனுவான்' என்றிவை முதலிய வசனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவே. அவைகளும் அந்தந்தப் பலங்களில் ஆசையுடையவர்களைப்பற்றிச் சொல்லப்பட்டவைகளாகையினுல் முன்புசொன்ன நிஷேதங்களுக்கு விருத்தமல்ல.

பாகவதர்கள் கூட்டங்கள் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டதாய் நம்மாழ்வார் என்கிற மஹாயோகியினுல் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட த்ரமிடோபநிஷத்தில் பகவானுடைய தாஸர்களுக்குப் பஸ்மத்தினுல் ஊர்த்வபுண்ட்ரம் அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது எப்படிப் பொருந்தும் என்னில், இப்படி:— அந்தப் பாசுரம் ஸத்ருசமாக இருப்பதைக் காரணமாகக்கொண்டு உண்டாகிற ப்ரமத்தைச் சொல்லுகிறபடியினுல், (அதாவது ஊர்த்வபுண்ட்ரம் என்கிற ஒரு ஆகாரத்தைக் கண்டு வைஷ்ணவர்கள் என்று ப்ரமிக்கிருள் என்றபடி, ப்ரமம் என்பதினுல் வாஸ்தவத்தில் அப்படியல்ல என்பது அறியத்தக்கது). அன்றிக்கே பஸ்மம் என்பதற்கே அஸாதாரணமான பதம்ப்

[illegible]

யோகிக்கப்படவில்லை. * அவ்விடத்தில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற நீறு என்கிற பதம் பகவானுடைய பக்தர்களின் திருவடித்தாள்களைப்பற்றி அந்த யோகியினுலேயே (தமரடி நீறுகொண்டு) என்று ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினுல் அவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கிற நீறு என்னும் பதம் ஸ்ரீ சூர்ணத்தைச் சொல்லுவதாகவும் நிர்வஹிக்கமுடியும். அவ்விடத்தில் அப்படி இருந்தாலும் இருக்கட்டும். அவ்விடத்திலேயே வெளுத்தநிறமுடைய சூர்ணத்தைக்கொண்டு தூவுவதினுல் பகவான் இடத்தில் ஆசை உடையவளான நாயகியின் விரஹத்தினுல் உண்டான உந்மாதாவஸ்தை (பைத்தியம் பிடித்திருக்கும் அவஸ்தை) சாந்தியடையும் என்று சொல்லியிருப்பது எப்படிப்பொருந்தும்? என்னில் அவ்விடத்தில் முன் பாசுரத்தை யோசித்து திருமண்பொடியைத் தூவுவதினுல் அந்த வ்யாதி சாந்தியடையும் என்றே வாக்யத்திற்கு அர்த்தம் சொல்லவேண்டுமாதலால்.

---

* அதாவது நாலாம்பத்தில், நாலாம் திருவாய்மொழியில் 'எறியபித்தினோடு எல்லாவுலகும் கண்ணன் படைப்பென்னும் நீறுசெவ்வே யிடக்காணில் நெடுமாலடியாரென்றோடும் நாறுதுழாய் மலர்காணில் நாரணன் கண்ணி ஈதென்னும் தேறியும் தேறுதும்மாயோன் திறத்தனளே இத்திருவே' என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இங்கு 'நீறு' என்கிற ஸாதாரண பதம் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதினுல் இது பஸ்மத்தைத்தான் சொல்லுகிறது என்று நிஷ்கர்ஷிக்கமுடியாது. ஏனெனில் இல்வாழ்வோரே மேல் இந்த நீறு என்னும் பதத்தை 'தூளி' என்னும் அர்த்தமாகும்படி சில இடங்களில் ப்ரயோகித்திருக்கிறார். ஆகையினுல் இங்கு 'நீறு' என்றது பொடி என்றாய் வெளுத்த திருமண் பொடியைச் சொல்லுகிறதென்று நிர்வஹிக்கக்கூடும். அதாவது 'தீர்ப்பாரை' என்னும் திருவாய்மொழியில் 'இவளைப் பெறும் பரிசு இவ்வணங்காடுதல் அன்று அந்தோ! குவளைத்தடங் கண்ணும் கோவைச் செவ்வாயும் பயந்தனள் கவளக்கடாக்களிறட்டபிரான் திருநாமத்தால் தவளப்பொடிக்கொண்டு நீர்இட்டிடுமின் தணியுமே' என்றருளிச்செய்து மேல் பாட்டில் 'தணியும்பொழுது இல்லைநீர் அணங்காடுதிர் அன்னைமீர் பிணியும் ஒழிகின்றதில்லை பெருகும் இதுவல்லால் மணியினணி நிறமாயன் தமரடிநீறு கொண்டு அணியமுயலின் மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே' என்று அருளிச்செய்திருப்பதினுல் கீழ்ப்பாட்டில் நிருபித்தருளின தவளப்பொடியை 'தமரடிநீறு' என்று இப்பாட்டில் விவரித்தாராயிற்று, என்பது அறியத்தக்கது.

186749

ஏப்ரல்மீ த்திய பஞ்சாங்கம்.

ஏப்ரல்	2வ	பங்குனி	20வ வியாழன், நவமி, 57-45; புனர், 33-47; ஸ்ரீராமநவமி.
,,	5வ	,,	23வ ஞாயர், ஏகாதசி, 5-55, மகம் 49-34.
,,	7வ	,,	25வ செவ்வாய், த்ரயோதசி 9-36, உத்திரம் 54-37, பங்குனி உத்திரம்.
,,	13வ	சித்திரை	1வ திங்கள், பஞ்சமி 47-11, கேட்டை 43-52, வஸந்தருது, சித்திரை வருஷப்பிறப்பு-தர்ப்பணம் உதயத்தில்.
,,	16வ	,,	7வ ஞாயர், ஏகாதசி, 14-2, சதயம் 22-15, ஏகாதசி வ்ரதம்.
,,	20வ	,,	8வ திங்கள், த்வாதசி 10-17, பூரட்டாதி 20-17, வராஹ ஜயந்தி.
,,	22வ	,,	10வ புதன், சதுர்தசி 5-58, ரேவதி 20-7, அமாவாஸ்யை தர்ப்பணம்.
,,	25வ	,,	13வ சனி, த்விதியை 8-37, கார்த்திகை 28-38 பலராம ஜயந்தி.
,,	26வ	,,	14வ ஞாயர், திருதியை 11-52, ரோகிணி 33-41, அக்ஷய த்ருதியை.
,,	28வ	,,	16வ செவ்வாய், பஞ்சமி 17-5, திருவாதிரை 43-4, ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்.
மேமீ	4வ	,,	22வ திங்கள், ஏகாதசி, 42-7, பூரம் 10-3, ஏகாதசி
,,	7வ	,,	25வ வியாழன், சதுர்தசி 38-0, சித்திரை 14-42, ஸ்ரீ நரஸிம்ஹ ஜயந்தி, சித்ரா பௌர்ணமி.

வானசாஸ்த்ர கடிகாரம்.

இந்த கடிகாரம் தேரெழுந்தூர் போர்டு எலிமெண்டெரி ஸ்கூல் உபாத்யாயர் ஸ்ரீ. உப.M.S. க்ருஷ்ணமாசார்யரால் கண்டுபிடித்துச் செய்யப்பட்டு மதுரையில் நடந்த பதினொன்காவது வார்ஷிக மஹாஸங்கத்துக்கு அந்த ஸ்வாமியால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் பார்த்து ஆனந்திக்கப்பட்டது. அதன் விபரம்.

1. அதில் ஒரே சுத்தில் 24-மணியும் காட்டுகிறது.
2. இத்தனை மணிக்கு இன்ன நக்ஷத்ரம் உச்சமென்று காட்டுகிறது.
3. இத்தனை மணிக்கு இன்ன நக்ஷத்ரம் உச்சமானால் இன்ன லக்னம் என்று காட்டுகிறது.
4. மேலே சொல்லிய லக்னத்தில் எவ்வளவு நாழிகை ஆயிற்றென்றும் எவ்வளவு நாழிகை பாக்கி என்றும் காட்டுகிறது.
5. இன்னன்ன நக்ஷத்ரத்துக்கு இன்ன ராசி என்று காட்டுகிறது.
6. 12-மாதத்தையும், ஒவ்வொரு மாதத்தின் தேதிகளையும் ஒரே சுற்றில் காட்டுகிறது.

இந்த கடிகாரம் 1924௵ பிப்ரவரிமீ த்தில் தஞ்சாவூரில் நடந்த எஜுகேஷன் எக்ஸிபிஷனுக்கு கொண்டுவரப்பட்டு அப்போது அவ்விடம் விஜயம் செய்த எல்லா கனதனவான்கள் இதைப்பற்றி ஸந்தோஷித்து வித்யா இலாகா மந்திரியும் டைரெக்டரும் இதைப் பார்த்து மெச்சி ஒரு தங்க பதக்கம் கொடுத்தார்கள்.

இந்த அற்புதமான கடியாரத்தை ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் கண்டுபிடித்த விஷயம் நாம் எல்லோரும் ஸந்தோஷிக்கத்தக்கது. இதைப்போல் இவர் பல கடிகாரங்களை செய்து விற்பனை செய்தால் மிகவும் நன்றாக இருக்கும்.